# முற்போக்கு திட்டங்களை தமிழரசு ஆதரிக்கும்!

Registered as a News Paper in Ceylon    விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்: 49
போன்: 389

மலர் 12
இதழ் 132
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆனி 9 ரபி. ஆகிர் 18 செவ்வாய்க்கிழமை [23-6-70]

**லாலா சோப் பரிசுத் திட்டம்**

லாலா சோப் பரிசுத்திட்ட விபரங்களை 4-7-70 'ஈழநாடு' பத்திரிகையில் பார்க்கத் தவறாதீர்கள். 30-6-70-க்கு முன்னர் உங்களிடமிருக்கும் லாலா நீலசோப்பின் மேலுறைகளை அனுப்பி நீங்களும் அதிர்ஷ்டசாலிகளாகுங்கள். 30-6-70 மாலை 5 மணிக்கு கௌரவ அதிகாரிகள் முன் எமது தொழிற்சாலையில் அதிர்ஷ்டம்பார்க்கப்படும்.

**லாலாசோப்தொழிற்சாலை**
அச்சுவேலி.

### தேர்தலுக்கு முன் சிறிமா தெரிவித்த

# ராணுவப் புரட்சி பற்றிய புகார்கள் மீது விசாரணை

## 'சேகுவேரா' நடவடிக்கை குறித்தும் பொலிசார் ஆராய்வர்

கொழும்பு, திங்கள்

டட்லி அரசாங்கம் தோல்வியுற்று கூட்டணி அரசாங்கம் பதவிக்கு வரநேர்ந்தால் ராணுவத்தின் அநுசரணையுடன் புரட்சியொன்றுக்குத் திட்டமிடப்பட்டதாக தேர்தலுக்கு முன்னர் திருமதி பண்டாரநாயக்காவும் இதர கூட்டணித் தலைவர்களும் கவர்னர் ஜெனரலிடம் தெரிவித்த புகார்கள் பற்றி பொலிசார் இப்பொழுது புலன்விசாரணைகளை ஆரம்பித்திருக்கிறார்கள்.

புரட்சி சதிபற்றிய கூட்டணித்தலைவர்களின் அச்சத்துக்கு ஆதாரம் எதுவுமே இல்லையென்று அப்போதைய பிரதம மந்திரி திரு டட்லி சேனநாயக்கா கவர்னர் ஜெனரலிடம் தெரிவித்தி... யைக் கைப்பற்ற திட்டமிடுகிறார்கள் என்று கூட்டணித்தலைவர்கள் அச்சம் தெரிவித்தார்கள்.

இந்தப் புலன்விசாரணைகளுடன் 'சேகுவேரா' இயக்கம்பற்றிய விஷயங்களையும் பொலிசார் ஆராயவிருப்பதாகத் தெரிகின்றது.

... இயக்கம்சம்பந்தமாக கைது செய்யப்பட்டவர்கள் பலர் இன்னமும் காவலில் இருக்கிறார்கள்

## இரத்ததானம் கொடுப்பதில் யாழ். மாணவர் முன்மாதிரி

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணப்பகுதி மாணவரிடையே இரத்ததானம் வழங்கும் தியாக மனப்பான்மை அதிகரித்து வருவதாக யாழ் ஆஸ்பத்திரி இரத்த வங்கிப் பொறுப்பாளரான டாக்டர் ஸி. ஏ. பிலிப்பையா தெரிவிக்கிறார். இவர்களில் மிக அதிகமானோரும் எவ்வித சன்மானமும் பெறாமலே இரத்ததானம் செய்துள்ளனர்.

இரத்ததானம் வழங்குவதில் மாணவிகளும் முன்மாதிரி காட்டுவதாயும் தெரிவித்த அவர் சாவகச்சேரிப் பெண்கள் கல்லூரி மாணவிகளில் 11 பேர் எவ்வித சன்மானமுமின்றி இரத்த... யாழ், மத்திய கல்லூரியில் 32 பேரும் இரத்ததானம் செய்துள்ளதாகவும் டாக்டர் பிலிப்பையா தெரிவித்தார்.

கடந்தமாதம் 19-ம் திகதியிலிருந்து இம்மாதம் 20-ம் திகதிவரை யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்குத் தமது இரத்தத்தை இலவசமாக வழங்கிய யாழ்ப்பாணப்பகுதி மாணவமாணவியர் விபரம் வருமாறு:-

யாழ். மத்தியகல்லூரி-32 மாணவர்கள், பலாலி ஆசிரியபயிற்சிக் கல்லூரி-14 பேர், சாவகச்சேரிப் பெண்கள் கல்லூரி-11, வேலணை மத்திய மகாவித்தியாலயம் 15 பேர், யாழ். கனிஷ்ட...

## ஆட்சிமன்றத்தில் சாவகச்சேரி எம். பி.

கொழும்பு, திங்கள்

கூட்டரசாங்கத்தின் முற்போக்கான சோஷலிச திட்டங்களுக்கு தமிழரசுக்கட்சி பூரண ஒத்துழைப்பு வழங்கும் எனறு சாவகச்சேரி எம். பி. திரு. வி.என். நவரத்தினம் இன்று கூறினார்.

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம் இன்று தொடர்ந்து ஆட்சிமன்றத்தில் நடந்த போது திரு வி. என் பேசினார்

அவர் மேலும் பேசுகையில் 55 வயதுக்கு மேற்பட்ட ஊழியர்களை நிறுத்துவதன் மூலம் வேலையற்ற இளைஞர் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் முயல்வதை நிறுத்தி வேறுவழிகளில் அப் பிரச்சினைகளைத் தீர்க்க முயலலாமென்று கூறினார்.

போதனாமொழி, நீதிமன்ற மொழி போன்ற விஷயங்களில் தமிழ்க்காங்கிரஸ் கட்சிக்கும் தமக்கும் கிழக்கு மாகாணத்திலுள்ள ஏனைய கட்சி எம். பி.க்களுக்கிடையில் எவ்வித கருத்து வேறுபாடும் கிடையாதென திரு. வி. என். சொன்னார்.

உடுப்பிட்டி எம். பி. திரு. க. ஜெயக்கொடி, ஊர்காவற்றுறை எம். பி திரு. கா. பொ. இரத்தினம் ஆகியோரும் தமிழரசுக்கட்சி சார்பில் பேசினர்.

கம்யூனிஸ்ட்கட்சியைச் சேர்ந்த திரு. சரத்முத்தெட்டுகம பேசுகையில், கிழக்கு ஜெர்மனி, வியட்னாம் புரட்சி அரசு ஆகியனவற்றை அரசாங்கம் அங்கீகரித்ததற்கான எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டை மறுத்தார்.

கல்குடா எம். பி. திரு. தேவநாயகம் பேசுகையில், முன்னைய ஆட்சிக்காலத்தில் தமிழரசுக்கட்சி விட்ட தவறுகளை வன்மையாகக் கண்டித்துப் பேசினார்.

கெக்கிராவை எம். பி. திரு. ஜினதாசா பேசுகையில், விவசாயிகளுக்கு உதவக்கூடிய வகையில் இந்த அரசாங்கம் பல நன்மையான திட்டங்கள் வகுத்திருக்கிறதென்றும், விவசாயிகள் இலகுவான முறையில் கடனுதவி பெறுவதற்கும் இந்த அரசாங்கம் வழி வகுத்திருக்கிறதென்றும் பாராட்டிப் பேசினார்.

## இலங்கைக்கு எண்ணெய்: அரபு நாடுகள் ஆர்வம்

கொழும்பு, திங்கள்

டட்லிசேனநாயக்கா அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் எண்ணெய்வர்த்தகத்தின் மூலம் இலங்கையிலிருந்துபெற்ற வருவாயை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு அரபுநாடுகள் உறுதியுடன் முயற்சிசெய்துவருகின்றன.

ஒன்றேகால் கோடி ரூபா பெறுமதியான எண்ணெயை இலங்கை வாங்குகிறது. இதில் கணிசமான அளவு வருமானம் முன்னர் அரபு நாடுகளுக்குக் கிடைத்துவந்தது. டட்லியின் அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின் மேற்கத்திய நாடுகளுக்கே இப்பணம் கிடைத்தது. இப்போது மீண்டும் தங்கள் பங்கைப் பெறுவதற்கு அரபு நாடுகள் தீவிரமாக முயற்சி செய்துவருகின்றன.

இலங்கையின் தேயிலையையும் மற்றும் பொருள்களையும் வாங்கிக்கொண்டு அவற்றுக்குப்பதிலாகசுத்திகரிக்கப்படாத எண்ணெயைக்கொடுப்பதற்கு ஐக்கிய அரபுக்குடியரசிலிருந்தும் ஈராக்கிலிருந்தும் வந்த தூதுக்குழு

(4-ம் பக்கம் பார்க்க)

## வெலிமடை ஆட்சேபமனு: விசாரணை நேற்று ஆரம்பம்!

கோட்டை திங்கள்

வெலிமடைத் தேர்தல் ஆட்சேபமனு இன்று நுவரெலிய சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது,

போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்ட திரு ஆர். எம். பண்டாரவின்தெரிவை ஆட்சேபித்து இம் மனுவை திரு பேர்சி சமரவீரா தாக்கல் செய்திருந்தார்.

மனுதாரர் பேர்ஸி சமரவீராவும் இன்னொருவரும் இன்று சாட்சியமளித்தனர் நாளை காலை 10 மணிக்கு விசாரணை தொடர்ந்துநடைபெறும்.

## 400 பேர் இரத்ததானம் செய்தனர்!

அனுராதபுரம், திங்கள்

அனுராதபுரத்தில் இவ்வருடம் நடைபெற்ற பொஷன் விழாவில் 400 பேர் இரத்ததானம் செய்துள்ளதாக சுகாதார இலாகா அத்தியட்சகர் தெரிவிக்கின்றார்.

இதுவரை ஒரே தடவையில் இரத்ததானம் செய்தவர்களின் எண்ணிக்கையில் இதுவே கூடுதலென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## டிராக்டர் சாரதி தெரியுண்டுமாண்டார்

யாழ்ப்பாணம், செவ்வாய்

விபத்தினால் ஏற்பட்ட...

## கொடிகாமத்தில் சுதந்திரக்கட்சிக் கிளை

யாழ்ப்பாணம், செவ்.

சாவகச்சேரித் தொகுதியில் முதலாவது சுதந்திரக் கட்சிக்கிளை இன்று கொடிகாமத்தில் திறந்து வைக்கப்பட இருக்கிறது. வடபகுதி...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செய்துள்ளனர்.

இரத்ததானம் வழங்குவதில் மாணவிகளும் முன்மாதிரி காட்டுவதாயும் தெரிவித்த அவர் சாவகச்சேரிப் பெண்கள் கல்லூரி மாணவிகளில் 11 பேர் எவ்வித சன்மானமுமின்றி இரத்தத்தைத் தானம் செய்துள்ளதாகத் தெரிவித்தார்.

சென்பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்கள் 38 பேரும் ...வியர் விபரம் வருமாறு:-

யாழ். மத்தியகல்லூரி-32 மாணவர்கள், பலாலி ஆசிரியபயிற்சிக் கல்லூரி-14 பேர், சாவகச்சேரிப் பெண்கள் கல்லூரி-11, வேலணை மத்திய மகாவித்தியாலயம் 15 பேர், யாழ். கனிஷ்ட தொழில்நுட்பக்கல்லூரி-37. இளவாலை சென் ஹென்றீஸ் 18 பேர், சென்பற்றிக்ஸ்-38 பேர்.

# நீர்வேலி கொலைவழக்கில் இரு எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம், செவ்.

நீர்வேலி வடகு கொலை வழக்கில் இரு எதிரிகளை நேற்று யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு டயஸ் விடுதலை செய்தார்

நீர்வேலியில் சின்னப்பொடியன் பொன்னன் என்பவர் கொலைசெய்யப்பட்டதைத் தொடர்ந்து சந்தேகத்தின்பேரில் இலகுப்பிள்ளை வைத்திலிங்கம், வைத்திலிங்கம் செல்லத்துரை, தம்பிஐயா சின்னத்துரை, சதாசிவம் தியாகராசா, செல்லப்பா சந்திரசேகரம் ஆகியோர் சரணடைந்திருந்தனர்.

கோப்பாய் பொலிசார் நேற்று தம்பையா சின்னத்துரை, சதாசிவம் தியாகராசா, செல்லப்பா சந்திரசேகரம் ஆகியோருக்கெதிராக வழக்கு தாக்கல்செய்தனர். இதைத் தொடர்ந்து மாஜிஸ்திரேட் சந்தேகநபர்களான மற்றும் இருவரை விடுதலை செய்தார்.

சந்தேக நபர்கள் சார்பில் புறக்டர் ஆர் விஸ்வநாதன் புறக்டர் தளையசிங்கம் யோகநாதன் ஆகியோர் ஆஜரானார்கள்.

## 13 ஆட்சேப மனுதாக்கல்

கொழும்பு, திங்கள்

தேர்தல் ஆட்சேப மனுக்கள் வடபகுதியில் தான் கூடுதலாக தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மொத்தம் தாக்கல் செய்யப்பட்டுள்ள 13 தேர்தல் ஆட்சேபமனுக்களில் 5 மனுக்கள் வடபகுதியைச் சேர்ந்தவையாகும்,

யாழ்ப்பாணம், வவனியா, மன்னார், பருத்தித்துறை, வட்டுக்கோட்டை, நிந்தாவூர், பட்டிருப்பு, டெடிகம, நீர்கொழும்பு, நுவரேலியா, கண்டி, வெலிமடை, இரத்தினபுரி ஆகிய தொகுதிகளுக்கான தேர்தல் ஆட்சேபமனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## விமானம் திசை திருப்பப்பட்ட

பாரிஸ், ஜூன், 22

134பேருடன் பெய்ரூட்டிலிருந்து புறப்பட்ட விமானம் திசைதிருப்பப்பட்டது. கெய்ரோவில் இந்த விமானம் இறக்கப்பட்டுள்ளது.

பாரிஸிலுள்ள இந்தவிமானத்துக்குச் சொந்தமான கம்பனி இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது, அல்பேனியரே இந்த விமானத்தை திசைதிருப்பியதாகக் கூறப்படுகிறது,

புரட்சி சதிபற்றிய கூட்டணித்தலைவர்களின் அச்சத்துக்கு ஆதாரம் எதுவுமே இல்லையென்று அப்போதைய பிரதம மந்திரி திரு டட்லி சேனநாயக்கா கவர்னர் ஜெனரலிடம் தெரிவித்திருந்தார், என்றாலும் கூட்டணித்தலைவர்கள் தமது அச்சம்பற்றி தேர்தல் பிரசாரங்களின் போது தொடர்ந்து கருத்துக்களை வெளியிட்டுவந்தார்கள். சேனநாயக்கா அரசாங்கம் தோல்வியுற்றால் கூட்டணியினர் பதவிக்கு வராமல் தடுப்பதற்கு வலதுசாரிகள் புரட்சியொன்றை நடத்தி ஆட்சியைக் கைப்பற்ற திட்டமிடுகிறார்கள் என்று கூட்டணித்தலைவர்கள் அச்சம் தெரிவித்தார்கள்.

இந்தப் புகார்கள்பற்றிய புலன் விசாரணைகளுடன் 'சேகுவேரா' இயக்கம்பற்றிய விஷயங்களையும் பொலிசார் ஆராயவிருப்பதாகத் தெரிகின்றது

சேகுவேரா இயக்கம்சம்பந்தமாகக்கைதுசெய்யப்பட்டவர்கள் பலர் இன்னும் காவலில் இருந்து வருகின்றனர்

## நடிகர் காமினி விசாரிக்கப்பட்டார்

பிரபல சிங்களத் திரைப்பட நடிகர் காமினி பொன்சேகா நேற்றிரவு பொலிசாரால் விசாரிக்கப்பட்டார் பிரதம மந்திரியைத் தாக்குவதற்கு பயமுறுத்தல் தெரிவிக்கப்பட்டதான ஒரு புகாரின்மீது திரு காமினி விசாரிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது

கூட்டணி கட்சிகளுக்கு எதிராக தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்ட சினிமா நடிகர்கள் எல்லாருக்கு எதிராகவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததினால் பிரதமரைத் தாக்குவது சம்பந்தமாக பயமுறுத்தல் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது

(சி. பி. ஏ)

# 'பாமரமக்களிடம் வகுப்புத் துவேஷம் கிடையாது'

## நயினாதீவுக்காட்சி உதாரணம் என்கிறார் யாழ். உதவி மேயர்

யாழ்ப்பாணம், செவ்.

வகுப்புத்துவேஷம் தலைவர்களிடம் தான் இருக்கிறது. சாதாரண பாமரமக்களிடம் துளியளவும் வகுப்புத் துவேஷம் இல்லை என்பதை நயினாதீவில் கண்டுகொண்டேன். அங்கு தமிழ், சிங்கள மக்கள் எவ்வித வேறுபாடும் காட்டாது மிகவும் அன்புடன் பழகினார்கள்.

நயினாதீவில் கடைசித்தினம் நடந்த அன்னதானத்தில் கலந்துகொண்ட யாழ். உதவிமேயர் திரு. ஏ துரைராஜசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. துரைராஜசிங்கம், மேலும் தெரிவித்ததாவது: வகுப்புவாதத்தைக கிளப்பிவிடும் தலைவர்கள் ஒருமுறை நயினாதீவிற்கு விஜயம்செய்து அங்கு தமிழ் சிங்களமக்கள் எவ்வித வித்தியாசமுமின்றி உணவருந்துவதை நேரில் பார்த்தார்களேயானால், உடனடியாக வகுப்புவாதத்தை விட்டுவிடுவார்கள்.

இலங்கையில் வேறு எங்கும் இல்லாதவகையில், நயினாதீவுஅன்னதானசபையினர் சுமார் 60,000 யாத்திரிசர்களுக்கு, அன்னதானம வழங்கினார்கள் தொண்டர்கள் காலைமுதல் பட்டினியிலிருந்து பக்தர்களுக்குச் சாதம் வழங்கினார்கள்,

சைவத்தை அடிப்படையாகக் கொண்ட இக்கோவிலில், சிலசைவர்கள், சைவநெறிக்கு மாறாக, உடையணிந்து செல்வது வருந்தக்கூடியவிஷயமாகும்.

நயினாதீவில் 15 நாட்களும் அன்னதானம் வழங்கப்பட்டது. தினமும் தமிழ், சிங்கள மக்கள் ஒன்றாக பழகினார்கள். இதேபோன்று மற்றும் இடங்களிலும் தமிழ். சிங்கள மக்களின் ஒற்றுமை வளர்ந்தால் வகுப்புவாதம் ஒழிந்துவிடும்.

## யாழ்.மாநகரசபை நிதி உதவி வழங்கும்

யாழ்ப்பாணம், செவ்

நாட்டைக்காக்கும் நிதிக்கு உதவும்படி யாழ்ப்பாணப் நகரமேயர் மாநகரசபை ஊழியர்களை கேட்டுள்ளார்

நேற்று மேயர் அனுப்பிய சுற்றுநிருபனம் ஒன்றின் மூலம் நாட்டைக்காக்கும் நிதிக்கு ஊழியர்கள் உதவ வேண்டுமென கோரியிருந்தார்.

மேயரின் வேண்டுகோளுக்கமைய யாழ் நகரசபைஊழியர்கள் நாட்டைக்காக்கும் நிதிக்கு உதவ முன்வந்துள்ளனர்.



## தபால் மந்திரி திறந்துவைப்பார்

யாழ்ப்பாணம், செவ்

கொடிகாமத்தில் தென்மராட்சி கிழக்கு இராமநாதன் கழக செயலகத்தை அடுத்த மாதம் தபால் மந்திரி திரு. செ குமாரசூரியர் திறந்துவைப்பார்

செயலகத்தை திறந்துவைக்கும்படி இராமநாதன் கழக செயலாளர் திரு. கே. எஸ் மகேசன் விடுத்த அழைப்பை தபால் மந்திரி ஏற்றுள்ளார். தபால் மந்திரிக்கு வரவேற்பளிக்கவும் இராமநாதன் கழகம் ஏற்பாடு செய்துவருகிறது.

இம்மாதம் 25-ந் திகதி மாலை தபால்மந்திரி திரு செல்லையா குமாரசூரியர் பலாலி விமானநிலையம் வந்திறங்கியதும் அங்கு அவருக்கு உற்சாகமான வரவேற்பளிக்கப்படும். அங்கிருந்து அவர் யாழ். நகரத்துக்கு ஊர்வலமாக அழைத்துவரப்படுவார். யாழ். திறந்த வெளியரங்கில் அவருக்கு பொது வரவேற்பளிக்கப்படும்.

# டிராக்டர் சாரதி நெரியுண்டுமாண்டார்

யாழ்ப்பாணம், செவ்வாய்

வவனிக் குளத்திலிருந்து எரு ஏற்றிக்கொண்டு வந்த டிராக்டர் சாரதியொருவர் நெல்லியடிக்குச் சமீபத்திலுள்ள முள்ளியான் என்ற இடத்துக்கருகிலுள்ள சிறு குளத்துக்குப் பக்கத்தில் டிராக்டருடன் இணைந்திருந்த பெட்டி சரிந்து குளத்தினுள் வீழ்ந்ததால் டிராக்டரின் சக்கரத்தின் கீழ் அகப்பட்டு மாண்டார்.

சந்தையா குழந்தைவடிவேலு என்னும் 38 வயதான டிராக்டர் சாரதியின் மரணம் பற்றி யாழ்ப்பாண நகர மரணவிசாரணை அதிகாரி திரு. நா இராசநாயகம் யாழ். ஆஸ்பத்திரியில் மரணவிசாரணை நடத்தினார்.

விபத்தினால் ஏற்பட்ட மரணம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

## டாக்டர் சுகர்ணோ

### அரச மரியாதையுடன் சடலம் தகனம்

ஜாகர்த்தா, ஜூன், 22

காலஞ்சென்ற முன்னாள் இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்ணோவின் சடலம் இன்று அரசமரியாதையுடன் கிழக்கு ஜாவாவிலுள்ள அவரது சொந்த இடத்தில் தகனம் செய்யப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் கண்கள் கலங்க இறுதி மரியாதை செலுத்தினார்கள்,

விலக்கப்பட்ட

# 'தனியார் ஊழியர்களையும் வேலையில் சேர்க்கவேண்டும்'

## அமைச்சரிடம் வற்புறுத்து

கோட்டை, திங்கள்

அரசியல் காரணங்களுக்காக தனியார் துறையிலிருந்து விலக்கப்பட்ட ஊழியர்கள் மீண்டும் வேலைக்கு எடுக்கப்பட வேண்டுமென தொழில் அமைச்சரை இன்று அகில இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் வற்புறுத்தியது.

தனியார் ஸ்தாபனமொன்றில் 300 பேர் அரசியல் காரணங்களுக்காக விலக்கப்பட்டதாக அமைச்சருக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

இது சம்பந்தமாக தாம் நடவடிக்கை மேற்கொள்வதாக அமைச்சர் அவர்களிடம் உறுதியளித்தார்,

கிளை,

யாழ்ப்பாணம், செவ்.

சாவகச்சேரித் தொகுதியில் முதலாவது சுதந்திரக் கட்சிக்கிளை இன்று கொடிகாமத்தில் திறந்து வைக்கப்பட இருக்கிறது. வடபகுதி சுதந்திரக் கட்சி அமைப்பாளர் திரு எம், நடராசா கிளையை அங்குரார்ப்பணம் செய்து வைப்பார். இதற்கான ஒழுங்குகளை திரு. எஸ், எம் கமலநாதன் செய்துள்ளார்.

## உருக்காலை 2-ம் கட்ட வேலை

### ஆரம்பிக்க உத்தரவு

கொழும்பு, திங்கள்

சோவியத் நிதியுதவியுடனான உருக்குத் தொழிற்சாலையின் இரண்டாம்கட்ட வேலைகளை தொடர்ந்து மேற்கொள்ளும்படி கைத்தொழில் அமைச்சர் திரு டி பி சுபசிங்க உருக்கு கூட்டுத்தாபனத்தைப் பணித்திருப்பதாக பத்திரிகைக் குறிப்பொன்றிலிருந்து தெரியவருகின்றது.

முதலாவது உருக்குத் தொழிற்சாலை 3 வருடங்களுக்கு முன் இங்கு நிறுவப்பட்டது. உருக்குத் தொழில் சாலையின் இரண்டாவது கட்டவேலை இபபோது ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இத்தொழில் சாலைகளின் மொத்த வேலைத்திட்டமும் பூர்த்தியாக ரூபா மூன்றரை கோடி செலவாகும். இதில் ருஷ்யா 1கோடி 40 லட்சம் ரூபாவைக் கொடுத்துதவும்.

# இ.போ.ச.யாழ்.டிப்போவில் தொழிற்சங்க வேற்றுமை

யாழ்ப்பாணம். செவ்

இலங்கை போக்குவரத்து சபையாழ்ப்பாணம் டிப்போவிலுள்ள தொழிற்சங்கங்களின் மாறுபட்ட கருத்துக்களினால் தொழிற்சங்கங்கள் இரு பிரிவாக பிரிந்துள்ளது. சமசமாஜக் கட்சி தொழிற்சங்கமும, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொழிற்சங்கமும் ஒன்றாக இயங்கிவருகிறது. தமிழரசு ஆதிக்கத்திலுள்ள பஸ் தொழிலாளர் கழகமும், தமிழ்க் காங்கிரஸ் தொழிற்சங்கமும், சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி, யல் பகுதியில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் மீது நம்பிக்கையில்லையென்று பஸ் தொழிலாளர் கமிட்டி தீர்மானித்ததாகவும்இதற்குமற்றும் தொழிற்சங்கங்கள் ஆட்சேபம் தெரிவித்ததாகவும் அறியப்படுகிறது.

இவ்விஷயம், மேலிடத்திற்கு கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது,

பஸ் தொழிலாளர் கமிட்டி 3 தினங்களுக்கு முன் மீண்டும் கூடி, உயர் உத்தியோகத்தர் சிலரை உடன ஆதிக்கத்திலுள்ள தொழிற்சங்கமும் ஒன்றாக இயங்கி வருகிறது.

சமசமாஜக் கட்சி, சுதந்திரக்கட்சி தொழிற்சங்கங்கள் மற்றைய தொழிற் சங்கங்களை சேர்க்காமல் பஸ் தொழிலாளர் கமிட்டி அமைத்ததை தொடர்ந்தே தொழிலாளர் மத்தியில் மேற்கூறப்பட்ட பிரிவினை ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

கோண்டாவிலிலுள்ள டிப்போவில் உள்ள பொறியி...

(4-ம் பக்கம் பார்க்க)

# மந்திரிசபை நேற்று செய்த முடிவுகள்!

(நமது நிருபர் பெரி. சுந்தரலிங்கம்)

55 வயதான அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர் ஓய்வுபெறுவதற்கான திட்டம்பற்றி இலாக்காத்தலைவர்களுக்கும் நிரந்தரக் காரியதரிசிகளுக்கும் அனுப்புவதற்கான சுற்றறிக்கை நகலை ட்டணி மந்திரிசபை அங்கீகரித்தது.

நேற்று பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் மந்திரிசபைக்கூட்டம் நடந்தது.

லேக்கவுஸ் நிறுவனத்தின்மீது விசாரணைசெய்து அறிக்கை சமர்ப்பிகக 'ரோயல் கமிஷன்' விரைவில் நியமிக்கப்பட இருப்பதாக மந்திரிசபைக கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது-

அரசாங்க ஊழியர்களுககு அரசியல்உரிமை பற்றியும், தொழிற்சங்கதிருத்தம் பற்றியும் பொது நிர்வாக அமைச்சர் திரு. பீலிக்ஸ் சமர்ப்பித்த அறிக்கை பற்றியும் ஆராயப்பட்டது.

## கொல்வினுக்கு மேலும் ஒரு அமைச்சு

தோட்டத்தொழில் அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவை அரசியல் சட்ட அலுவலக அமைச்சராகவும்நியமிக்கப் போவதாக பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ, மந்திரிசபைக் கூட்டத்தில் அறிவித்தார்.

## பறிமுதல்

விசேஷ குத்தகைதொடர்பாக அபிவிருத்தி செய்யப்படாமலிருக்கும் காணிகளை பறிமுதல் செய்வதாகவும் மந்திரிசபைக கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இது சம்பந்தமாக் ஆராய காணி அமைச்சர் தோட்டத்தொழில் அமைச்சர் வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சு கொண்ட மூவர்குழு நியமிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

வடமாகாணத்தில் உள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் சில தகவல்களைச் சேகரிப்பதற்கு ஆர்வமுள்ள பெண்கள் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். ஒரு கிராமத்துக்கு ஒருவர் மட்டும் தெரிவு செய்யப்படுவர். (விண்ணப்ப முடிவு 30-6-70) FLOATERS, 5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 2156

டீசல், பெற்ரோல் லொறிகள் திருத்துவதில் அனுபவமுள்ள மெக்கானிக் ஒருவர் தேவை. அண்மையில் பெற்ற நற்சான்றுகளுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 3121, மே/பா 'ஈழநாடு', த. பெ. இல.49, யாழ்ப்பாணம். 3121

### விற்பனைக்கு

நெற்காணி

கிளிநொச்சி ஏழாம் வாய்க்காலில் இருக்கும், நீர்ப்பாசன வசதியுள்ள பத்து ஏக்கர் நெற்காணி உடனடியாக விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும் விளம்பர இல:3110, மே/பா ஈழநாடு' த. பெ. இல: 49, யாழ்ப்பாணம். 3110

காணி

6 பரப்பு குடிநிலம் திருநெல்வேலி வட்டாரத்தில் பலாலி வீதிக்கு அருகாமையில், சந்தைக்கும் கமத்தொழில் பள்ளிக்கூடத்திற்குமிடையில் விரும்பத்தக்கது. தொடர்பு: வே. கணபதிப்பிள்ளை, 11, கற்பக விநாயகர் வீதி, நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம். 3108

### வகுப்புகள்

எமது பாடசாலையில் ரேடியோ மெக்கானிஸ்சம் சிறந்த முறையில் 4 மாதங்களில் தமிழில் பயிற்சி அளிக்கப்படும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். மாலை நேர வகுப்புக்களும் உண்டு. விண்ணப்பிக்க வேண்டிய கடைசித் திகதி 5-7-70. விபரங்களுக்கு எழுதவும். நேஷனல் ரேடியோ ஹோம், 11/A, மொம்சாக் மேல்மாடி, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 3114

### கல்வி

க. பொ. த. சாதாரண, உயர்தர வகுப்புகள் சிறந்த முறையில் பகல் வேளையிலும். 8-ந் தரம் தொடக்கம் க. பொ. த. உயர்தர வகுப்புவரை ஆங்கிலத்தில்

### வேலையற்ற இசைப்பட்டதாரிகள் கூட்டம்

26-6-70 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் லங்கா சுதந்திரக் கட்சிக் கிளை அலுவலக மண்டபத்தில் நடைபெறவிருக்கும் மேற்படி கூட்டத்திற்கு சகல வேலையற்ற இசைப் பட்டதாரிகளையும் சமுகம் தரும்படி அழைக்கிறோம்
2322

### அறிவித்தல்

யாழ்ப்பாணம் வசந்தா சேலை அச்சகத்தில் கடமையாற்றிவந்த திரு. வே. குமாரவேல் அவர்கள் தமது உயர்வுக்காக சொந்தமுறையில் தொழில் செய்யும் பொருட்டு 1970-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ந் திகதியுடன் இங்கிருந்து விலகிச் செல்கிறார் என்பதை அறியத் தருகிறோம்

வசந்தா சேலை அச்சகம்,
22, கல்லூரி வீதி,
நீராவியடி,
4324 யாழ்ப்பாணம்.

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
#### 23-6-70 செவ்வாய்

(செய்திகள்: காலை 6 45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.
காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 படப்பாட்டுகள், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன்ட் 61 மீ.
12-00 நண்பகல் இசை, 1-00 மாதர் கேட்டவை,
மாலை 4-25 கல்விஒலிபரப்பு 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 சிறுவர் விருந்து

இரவு 6-10 முத்திநெறி, 7-00 கிராமசஞ்சிகை, 7-15 சித்திரம், 7-45 வீணை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாதஸ்வரம்

### விற்பனைக்கு

கே.கே.எஸ். வீதியிலுள்ள 67/1 இலக்க கடை ஒன்று விற்பனைக்குண்டு விபரங்களுக்கு தி. கதிர்காமதம்பி, பிரதான வீதி பருத்தித்துறை. 3119

## ஆட்சிமன்றத்திலே....

நமது நிருபர்
பெரி.சுந்தரலிங்கம்

# "ஒருகொத்து அல்ல மூன்றுகொத்து அரிசி கொடுத்தாலும் சம்மதமே" ஜே.ஆர்.

**பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல கால வகையினுனே!**

ஆட்சிமன்ற வரலாற்றில் இன்னொரு புதிய ஏடு திருப்பப்பட்டது.

மக்களாட்சி மலர்ந்தபின், முதலாவது அரியாசன உரையின் மீதான விவாதம் நடைபெற்ற போது, இதுவரை காலமும் அரசாங்கத் தரப்பில் வீற்றிருந்த வர்கள் எதிர்த்தரப்பிலும், எதிர்த் தரப்பிலிருந்து ஓடு மீன் ஓட உறு மீன் வருமளவும் காத்திருந்தவர்கள், அரசாங்கத் தரப்பிலுமாக மாறி உட்கார்ந்து, விவாதிக்கத் தொடங்கினர்.

எதிர்க் கட்சியின் முதலாவது பேச்சாளராகக் கலந்து கொண்டவர், எதிர்க்கட்சித் தலைவர் திரு ஜே. ஆர். ஜயவர்தன முப்பதாண்டுகாலம் அரசியலையே வாழ்வாகக் கொண்டு, அரசியலுக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் இவர். சொல்ல வேண்டியவற்றை, சொல்ல வேண்டிய கட்டங்களில் 'சுருக்' கென்று தைக்க, வெட்டொன்று துண்டு இரண்டாகச் சொல்வதில் வல்லவர், 'சொன்ன சொல்லை வெல்லாத சொல்லின்மை அறிந்து' சொல்லக் கூடியவர், ஜே. ஆர்!

'கடந்த முப்பதாண்டு கால அரசியல் வரலாற்றில் ஜனநாயக ஆட்சிச் சூழலின் தட்ப, வெப்ப நிலைமைகளுக்கேற்ப, ஆட்சியிலும், எதிர்க் கட்சியிலுமாக மாறி, மாறி, உட்கார்ந்து போதிய அனுபவம் பெற்றவனாக இப்பொழுது எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு பேசுகிறேன்' என்று ஆரம்பித்தார் ஜே. ஆர்.

அரியாசன உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையைமுன்மொழிந்து பேசியவர் பெலியத்த தொகுதி எம் பி திரு மகிந்தா ராஜபக்ஸ. இவர்தான், ஆட்சிமன்றத்தில் இப்பொழுதுள்ள உறுப்பினர்களில் ஆக இளையவர் இவரது தந்தையும், பாட்டனாரும் அரசியலில் பெரும் புள்ளிகளாக விளங்கியவர்கள். ஆட்சிமன்றத்திலும் அங்கம் வகித்தவர்கள்.

பெலியத்த எம். பி. திரு. மகிந்தா ராஜபக்ஸ, அவரது பேச்சின்போது, 'வளர்ந்து வரும்புரட்சிகரமான இளைய தலைமுறையின் பிரதிநிதி என்ற' முறையில், முதன் முதலில் சிங்கள மொழியை அரியாசனம் ஏற்றிய பெருமை காலஞ்சென்ற திரு பண்டாரநாயக்காவுக்குத்தான் சாரும், என்ற கருத்தில் பேசியிருந்தார்.

திரு மகிந்தா ராஷபக்ஸவின் பரம்பரையையும், அவரது உற்சாகத்தையும் வெகுவாகப் பாராட்டிப் பேசிய திரு ஜே ஆர். சிங்கள மொழியை அரியாசனம் ஏற்றப்பாடுபட்டவர்களின் வரலாறு 1956ல் காலஞ்சென்ற பண்டாரநாயக்கா ஆட்சி பீடம் ஏறியபின்தான் ஆரம்பமாயிற்று என்றகருத்துப் பிழையானது என்பதைச் சுட்டிக்காட்டி, 1943ம் ஆண்டிலேயே தான், சிங்களத்தையே இந்த நாட்டின் அரச கருமமொழியாகக் கொண்டுவர, அப்போதிருந்த ராஜாங்க சபையில் பிரேரணை கொண்டு வந்ததாகக் கூறினார்.

'1943ம் ஆண்டில் பெலியத்த எம் பி பிறந்திருக்கக் கூட மாட்டார். புதிய வரலாறு படைக்க வீறு கொண்டெழும், புரட்சிகரமான இளைஞர் சமுதாயம் சில வேளைகளில் பழைய வரலாறை முற்றாக மறந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் இதனைச் சுட்டிக் காட்டுகிறேன். என்று வாழைப்பழத்தில் ஊசி ஏற்றினார்!

அடுத்து அரியாசன உரையில் கூறியுள்ள, 'சோஷலிஸ முற்போக்கு ஜன நாயகக் கொள்கைகளை எல்லாம் தாங்கள் முற்றாக ஆதரிப்பதாகக் கூறிய ஜே. ஆர், இரண்டு கொத்து அரிசி கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள்-நல்லது (சிரிப்பு) இரண்டு கொத்தையும் இலவசமாகக் கொடுத்தால் மிகமிக நல்லது (மேலும் சிரிப்பு) வேண்டுமானால் மூன்று கொத்து கொடுங்கள் நாங்கள் ஆதரிக்கத் தயார்!' என்று நமுட்டுச்சிரிப்புடன் சொன்னார்.

## சகலருக்கும் சமத்துவம் என்று உறுதி கூறுகிறார் இலங்கரத்தின

பிரதமர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்கா:

'மற்றஒன்றையும் வெட்ட வேண்டுமென்று அல்ல வா தேர்தல் காலத்தில் சொன்னீர்கள்?'

ஜே ஆர்: 'வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள்; முழுமனதுடன் வரவேற்கிறோம் ஐந்து வருடத்தில் என்ன, ஒரே வருடத்தில் தீர்க்கமுடியுமானாலும் மிக நல்லது! மக்களின் சார்பிலும், எங்கள் சார்பிலும், உங்கள் குறிக்கோள் அனைத்தும் கூடிய விரைவில் நிறைவேறவேண்டுமென நான் மனமாற விரும்பிப் பிரார்த்திக்கிறேன், அரியாசன உரையில் நீங்கள் சொல்லியிருப்பவை எல்லாவற்றையும் நிறைவேற்றினால், உலகின் உன்னத சொர்க்கம் இலங்கையைத் தவிர வேறெதுவும் இருக்கமுடியாது?

இதைத் தொடந்து 1970 தேர்தலில் வாக்களித்த 50 லட்சம் மககளில் சுமார் 22 லட்சம் பேர் எதிர்க் கட்சிகளுக்குவாக்களித்திருக்கின்றனர் என்றும் 24 லட்சம் வாக்குகளைப் பெற்ற அரசாங்கம் மக்கள் அரசாங்கம்' என்றால் 22 லட்சம் வாக்குகளைப் பெற்ற எதிர்க் கட்சிகளும் மக்களுடைய எதிர்க்கட்சிகள் தாம் என விளக்கி எதிர்க்கட்சிகளின் கருத்துகளுககு மதிப்பளிக்க வேண்டும் என்றும் கோரினர்.

அரசியல் சுதந்திரத்தைப் பற்றியும் வாக்குரிமை பற்றியும் பேசவந்த ஜே. ஆர். ரஷ்யா போன்ற நாடுகளில் இந்தச்சுதந்திரங்கள் இல்லையென்று காட்டி அந்த நாடுகளின் கொள்கையை நாங்களும் கடைபிடித்திருந்தால் இன்று நீங்கள் அங்கே இருக்கமாட்டீர்கள் என்று அரசாங்க தரப்பின் முன் வரிசையில் அமர்ந்திருந்த அமைச்சர்களையும் பிரதம அமைச்சரையும் சுட்டிக் காட்டினார்.

மக்கள் கமிட்டி குடியரசாகப் பிரகடனம் செய்வது போன்றவிஷயங்களைப்பற்றி அதற்கான சட்டங்கள் வரும்போது முழுமையாக விவாதிக்கலாம் என்று சொன்ன ஜே. ஆர். வெளிநாட்டுக் கொள்கையில் வட வியட்நாம், வடகொரியா, வியட்காங் போன்றவற்றை களைக் கொண்டுவந்துள்ளார்கள். அதிலே முதலாவது பிரேரணை சமஷ்டி அரசியலமைப்பைப் பற்றியது. சமஷ்டியென்ற பெயரை ஒட்டிவைத்துக் கொண்டிருக்கும்வரை இப்படியான பிரேரணைகளை அவர்கள் கொண்டுவரத் தான் வேண்டும். அந்தப் பெயரைக் கொண்டு உயிர் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் கேட்கத்தான் வேண்டும்'' என்று அமைதியாக ஆரம்பித்து தமிழரசுக்கட்சியினரையும் அவர்களது கொள்கைகளையும் காரசாரமாகச் சாடினார்.

''நாட்டில் ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்களை உன்னிப்பாக அவதானித்துவருபவர்களுக்கு வடக்கிலானுலென்ன. தெற்கிலானுலென்ன வகுப்புவாத அரசியல் வேரோடு அழிக்கப்பட்டு வருகிறது. எனவே சமஷ்டிக் கட்சி அந்தப் பெயரோடு இப்படியான (சமஷ்டி) பிரேரணைகளைக் கொண்டு வருவதற்கும் இதுவேகடைசியாகக் கிடைக்கும் வாய்ப்பாக இருக்கிறது. அடுத்த தேர்தலின் பின்னர் சமஷ்டிக்கட்சி என்ற ஒரு இயக்கமே இருக்காது' என்று 'தீர்க்கதரிசன' முன்னுரையுடன் ஆரம்பித்தார் அமைச்சர் ரி. பி. இலங்கரத்ன?

'நாங்கள் ஒருகாலும் சமஷ்டி அரசியல் அமைப்புக்கு இணங்கமாட்டோம்-எங்கள் தாய்நாட்டைப் பிரிக்க ஒருக்காலும் விட முடியாது எந்தவிதமான வகுப்புவாத சக்திகளுக்கும் அடிபணிய முடியாது.' இப்படி

காப்பதற்காக தமிழ்மொழிகள் விசேட விதிகள் சட்டத்தைக் கொண்டுவந்ததாகக் கூறினார்

'1965-ம் ஆண்டில் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம், தமிழ்க்கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்காக ஒரு மந்திரிப் பதவி அளித்தது. ஆனால்நாங்கள் 116 ஆசனங்களைப்பெற்றிருந்தும் அமைச்சரவையில் எல்லா இன மக்களுக்கும்இடமளிக்கவேண்டுமென்ற கொள்கை அடிப்படையில் தமிழரொருவருக்கு இடம் அளித்துள்ளோம்' என்று தபால் தந்தி அமைச்சர் குமாரசூரியரின் நியமனத்தைச் சுட்டிக்காட்டிப் பெருமைப்பட்டுக் கொண்டார்.

தமிழர், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என்ற பேதமின்றி, நாட்டின் எல்லாப் பகுதியிலும் உள்ள எல்லா இன மக்களும் சரிநிகர் சமமானமாகவாழவழிவகுக்கும் அரசியலமைப்பு திட்டத்தை உருவாக்குவதாகவும், அதன் கீழ், வடக்கு மாகாணத்தில் அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கும் சிறுபான்மைத் தமிழர்களும்கூட, தமிழரசுக்கட்சியினர் விரும்பாவிட்டாலும் சரிநிகர் சமானமாக வாழப் போகிறார்கள் என்றும் சொன்னார்.

தமிழரசுக்கட்சியின்போதனமொழிபற்றிய பிரேரணை குறித்துப் பேசுகையில், 1951-ல் உள்ள கல்வி திருத்தச் சட்டத்தின்படிதான், பெற்றோர்கள் விரும்பும் மொழியில் கல்வி கற்பிக்க இடம் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

நீதிமன்றங்களில் சிங்கள மொழி உபயோகம் குறித்து பேசுகையில், சாத்தியமான இடங்களில்தான் நீதிமன்றங்களில் சிங்களமொழி அமுலாக்கப் படுமாதலாலும் உத்தியோக மொழிச்சட்டம் தமிழ்மொழி விசேட விதிகள் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில்தான் மொழிப் பிரச்னைகள் தீர்க்கப்படுமாத

## உலக உதைபந்தாட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. பொ. த. சாதாரண, உயர்தர வகுப்புகள் சிறந்த முறையில் பகல் வேளையிலும். 8-ந் தரம் தொடக்கம் க. பொ. த. உயர்தர வகுப்புவரை ஆங்கிலத்தில் விசேட வகுப்புகளும். மு. வைத்திலிங்கம், எட்யுகேஷன் ஹோல், 67, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 3120

67/1 இலக்க கடை ஒன்று விற்பனைக்குண்டு விபரங்களுக்கு தி. கதிர்காமதம்பி, பிரதான வீதி பருத்தித்துறை. 3119

வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க


நன்றி தெரிவிக்கும் பிரேரணையைமுன்மொழிந்து பேசியவர் பெலியத்த தொகுதி

லாறை முற்றாக மறந்து விடக்கூடாது என்பதற்கா

நான் மனமார விரும்பிப் பிரார்த்திக்கிறேன், அரியாசன உரையில் நீங்கள்

## உலக உதைபந்தாட்டம்

# இம்முறையும் பிரேஸில் சாம்பியன்

மெக்ஸிக்கோ, ஜூன் 22 பிரேஸிலுக்கும், இத்தாலிக்குமிடையில், உலக உதைபந்தாட்டக் கிண்ணத்துக்காக நடைபெற்ற இறுதிப் போட்டியில், பிரேஸில் கோஷ்டி 4—1 கோல்களால் வெற்றிபெற்று, மூன்றுவது முறையாக 'உலகச் சாம்பியஞக' வந்துள்ளது.

மெக்ஸிக்கோவில் நடைபெற்ற, உலக உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் பிரேஸிலும், இத்தாலியும்




போட்டியிட்டன. மெக்ஸிக்கோவில் உள்ள 'அஸ்ரிக்' விளையாட்டரங்கில் இப்போட்டி நடைபெற்றது இப்போட்டியை 1,10,000 மக்கள் நேரடியாகப் பார்த்தார்கள்.

இப்போட்டி ஆரம்பமாக முன்பே இரு கோஷ்டியின் ஆதரவாளர்களும், மெக்ஸிக்கோ வீதிகளில் பாட்டுப் பாடியும், நடனமாடியும் கொண்டிருந்தார்கள். மொத்தத்தில், மெக்ஸிக்கோ நகரமே ஒரு திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. இத்தாலி நாட்டிலும் மக்கள் வீதிகளில் பாட்டுப்பாடிய வண்ணம் நேற்றுப் பூராகவும் நடமாடியதாக செய்திகள் கூறுகின்றன.

### திகில் மிகுந்த ஆட்டம்

இந்த இறுதிப் போட்டியில் மோதிய பிரேஸிலும், இத்தாலியும் ஆட்டம் தொடங்கி முடிவடையும் வரை மிகவும் வேகமாகவும், கடுமையாகவும் ஒருவருடன் ஒருவர் மோதினர்.

திகில் மிகுந்த இப்போட்டியைப் போன்று, இதற்கு முன் உலகில் வேறெந்தக் கோஷ்டிகளும் மோதியது கிடையாது. பிரேஸில் கோஷ்டியினர் வேகமாகவும், நிதானமாகவும், சாமர்த்தியமாகவும் விளையாடியதாலேயே, இத்தாலிக் கோஷ்டியினரைத் தோற்கடிக்க முடிந்தது. பிரேஸில் கோஷ்டியினர் முன்னணி வீரர்களும், பின்னணி வீரர்களும் ஒன்று சேர்ந்து விளையாட முற்பட்டதால், இத்தாலிக் கோஷ்டியினர் இவர்களின் முன்னேற்றத்தை தடுக்க முடியாது திணறடிக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

இத்திகில் மிகுந்த போட்டியை ரெலிவிஷனில் பார்வையிட்ட, பிரேஸில் நாட்டைச் சேர்ந்த இருதய நோயாளர் நூற்றுக்கு நாப்பது வீதமானோர் மயக்கமடைந்ததாகத் தெரியவருகின்றது.

இந்த ஆட்டம் தொடம் தொடங்கியதும் பிரேஸில் கோஷ்டியின் காப்டன் பீலி முதலாவது கோலைப் போட்டார். இதன் பின் 37 நிமிடங்கள் களித்து இத்தாலிக் கோஷ்டியின் வீரர் பெனின் செனு ஒரு கோலைப் போட்டார். இடைவேளையின் போது இருகோஷ்டிகளும் 1—1 கோலைப் பெற்றிருந்தது.

இடைவேளையின் பின்ஆட்டம் ஆரம்பித்ததும் பிரேஸில் கோஷ்டியின் வீரர்களான கெர்ஸன், ஜெயார், கார்லொஸ்னல் ஆகியோர் முறையே மூன்று கோல்களைப் போட்டனர்.

பிரேஸில் மெக்ஸிக்கோவில் கலந்து கொண்ட ஆட்டங்களில்; செக்கோஸ்லவாக்கியாவை 4-1 கோல்களாலும், இங்கிலாந்தை 1-0 கோலாலும், ருமேனியாவை 3-2 கோல்களாலும், ''கால் இறுதி''ப் போட்டியில் பேருவை 4-2 கோல்களாலும், ''அரை இறுதி''ப் போட்டியில் உருகுவேயை 3-1 கோல்களாலும், ''இறுதிப் போட்டி''யில் இத்தாலியை 4—1 கோல்களாலும் தோற்கடித்து, உலகச் சாம்பியஞக வந்தது.

உலக உதைபந்தாட்டச் சாம்பியன் பட்டத்தை மூன்று முறை (1958, 1962, 1970) பெற்ற நாடு, பிரேஸில் ஒன்றே என்பது குறிப்பிடத்தக்கது. (தே. நி)

அதற்கான சட்டங்கள் வரும்போது முழுமையாக விவாதிக்கலாம் என்று சொன்ன ஜே. ஆர். வெளிநாட்டுக் கொள்கையில்வட வியட்நாம், வடகொரியா, வியட்காங் போன்றவற்றை அங்கீகரிக்கும் அதேநேரத்தில் தென்வியட்நாம், தென்கொரியா போன்ற நாடுகளை அங்கீகரிக்காது விடுதல் ஒருதலைப்பட்சமானது என்று சொல்லி இந்தஒரே காரணத்துக்காகத்தான் இந்த அரியாசன உரையை ஆதரிக்க முடியாதிருக்கிறதென முடித்தார்.

### எஸ். ஜே. வி. செல்வநாயகம்

அடுத்து தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ் ஜே, வி செல்வநாயகம், தமிழரசுக் கட்சியின் மூன்று திருத்தப் பிரேரணைகளையும் முன்மொழிந்து பேசினர். தமிழரசுக் கட்சியின் முதல் பிரேரணை சமஷ்டி அரசியலமைப்பைப் பற்றியது. இரண்டாவது போதனமொழி தாய்மொழியாகத்தான் இருக்கவேண்டும். மூன்றுவது வடக்கு கிழக்கு மாகாணங்களில் நீதிமன்ற மொழி தமிழ் மொழியாக இருக்க வேண்டும்.

நீதிமன்ற மொழி வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ்மொழியாக இருக்க வேண்டும் என்பதைப்பற்றி திரு. திரு, ஜே. வி. செல்வநாயகம் கூறியதாவது:-

'தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் இது ஒருபெரிய விஷயம். ஆங்கில மக்களுக்கு நாம் அடிமைப்பட்டிருந்த போது ஆங்கிலத்தில் எல்லாம் நடந்தது. இப்போது நாம் சுதந்திரம் அடைந்துவிட்டோம், வடக்கு, கிழக்கு மாகாணத்திலும் சிங்களத்தில் நடத்துவதாக இருந்தால் நாங்கள் வேறு ஒரு இனத்துக்கு அடிமையாக வாழ்க்கை நடத்தவேண்டிய நிலையேற்படும். இந்த விஷயத்தில் நாங்கள் விட்டுக்கொடுக்க ஏலாதமாதிரியாக இருக்கிறது.''

### அமைச்சர் இலங்கரத்தின

தமிழரசுத் தலைவர் திரு. செல்வநாயகத்தைத் தொடர்ந்து அமைச்சர் திரு ரி. பி. இலங்கரத்ன பதிலளித்துப்பேசினர்:

''தமிழரசுக் கட்சியினர் மூன்று திருத்தப்பிரேரணை

சமஷ்டி அரசியல் அமைப்புக்கு இணங்கமாட்டோம்- எங்கள் தாய்நாட்டைப் பிரிக்க ஒருக்காலும் விட முடியாது எந்தவிதமான வகுப்புவாத சக்திகளுக்கும் அடிபணிய முடியாது.' இப்படி குரலை உயர்த்தி-ஆணித்தரமாகக் கூறிய இலங்கரத்ன, 1958-ம் ஆண்டு இனக்கலவரத்திற்குமுழுமுதற்காரணமானர்கள் யூ' என். பி.தான் என்று குற்றஞ்சாட்டினர்.

திருவாளர்கள் ஜே ஆர். ஜயவர்த்தன, முன்னைநாள் உணவு அமைச்சர் திரு.எம். டி. பண்டா போன்றவர்கள் கண்டியாத்திரை ஆரம்பித்துதான் இனக்கலவரத்துக்குத் தூண்டுகோலாய் அமைந்தது என்று சொன்ன திரு. ரி. பி. இலங்கரத்ன, 1956-ம் ஆண்டில், காலஞ்சென்ற பண்டாரநாயகாவுக்கு, தமிழரசாரின் ஆதரவில்லாது அரசாங்கம் அமைக்கக்கூடிய பரிபூரண பெரும்பான்மை கிடைத்தபோதும்கூட, தமிழ் மக்களின் நலனைக்

இடங்களில்தான் நீதிமன்றங்களில் சிங்களமொழி அமுலாக்கப் படுமாதலாலும் உத்தியோக மொழிச்சட்டம் தமிழ்மொழி விசேட விதிகள் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில்தான் மொழிப் பிரச்னைகள் தீர்க்கப்படுமாதலாலும், தமிழ் மக்கள் அஞ்சவேண்டிய அவசியமில்லை. அவர்களுக்கும் நியாயம் வழங்கப்படுமென்றும் கூறினர் திரு.ரி. பி.இலங்கரத்ன.

### உற்சவம்

தாவடி, திங்கள்

ஆனைக்கோட்டை மூத்த விநாயகராலய வருடாந்த உற்சவம் கடந்த 19-ம் திகதி ஆரம்பமாகியது. தொடர்ந்து 15 தினங்கள் விழா நடைபெறும்.

தாவடி வேம்படி முருகமூர்த்தி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் 10-ந் திகதி ஆரம்பமாகி 20-ந் திகதி விசேஷ அபிஷேகங்களுடனும் அன்னதானத்துடனும் பூர்த்தியாகியது.


வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சி
ஜெய்சங்கர் தேவிகா, நாகேஷ் நடித்த
தெய்வீக உறவு

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர்—கே. ஆர். விஜயா நாகேஷ்—வி கே. ராமசாமி நடித்த
பெண்ணை வாழ விடுங்கள்

இப்பொழுது திரையிடப்படுகிறது
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)
எம். ஜி. ஆர். ஜெயலலிதா
நாகேஷ் ரெங்கராவ்
மற்றும் பலர் நடித்த




ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
பிரீ-போயா, போயா 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
சரோஜாதேவி
நடித்த
மாட்டுக்கார வேலன்

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி-பத்மினி
நடித்த
திருவருட்செல்வர்
[ஈஸ்ட்மன் கலர்]

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
ஜெய்சங்கர் -கே. ஆர் விஜயா
நடித்த
பட்டணத்தில் பூதம்

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7&9-45 p. m.
Poya-Pre. Poya 10.30 a. m.
John Philip Law
Marisa Mell
in
DANGER DIABOLIC
(color)

REGAL JAFFNA
Daily 4 Shows
Jim Brown
Raquel Welch
in
100 RIFLES
(Adults only

மாணவர்கள், ஆசிரியர்கள் வர்த்தகர்கள்
மற்றும்
பல்வேறு தொழிற்துறையில்
ஈடுபட்டுள்ளோருக்கு உபயோகப்படக்கூடிய
'ஸ்கிரிபிலிங் புளக்ஸ்'
(Scribling Blocks)
கீழ்க்காணும் விலையில் விற்பனைக்குண்டு

| | | ரூ. ச. |
|---|---|---|
| 1-ம் | நம்பர் | -50 |
| 2-ம் | '' | 1-00 |
| 3-ம் | '' | 1-25 |
| 4-ம் | '' | 1-50 |
| 5-ம் | '' | 2-00 |

ஈழநாடு
(வர்த்தக அச்சகப்பகுதி)
63, சிவன்கோவில் மேலவீதி யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியா தலைநகரில் அரபுத் தலைவர்கள் ஆலோசனை

## இஸ்ரேல் எதிர்ப்பு நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்த முயற்சி

டிரிபோலி ஜூன் 22 இஸ்ரேலுக்கு எதிரான அரபு நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்காக அரபு நாடுகளின் தலைவர்கள்பலரும் லிபியா தலைநகரில் கூடியிருக்கிறார்கள்.

சவூதி அரேபியாவைத் தவிர மற்ற எல்லா அரபு நாடுகளின் தலைவர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொள்கிறார்கள்.

இந்த மாநாட்டுக்கு அம்மானிலிருந்து பாலஸ்தீன விடுதலை இயக்கங்களின் தலைவர் யாசார் அரபாத் அனுப்பியுள்ள ஒரு செய்தியில் ஜோர்டானில் அரபுக்கொரில்லாக்களுக்கும் அரசாங்கப் படைகளுக்குமிடையில் மீண்டும் சண்டை மூளக்கூடும் என்று தெரிவித்துள்ளார். அரசாங்கத்துக்கு எதிரான சக்திகள் இன்னும் ராணுவத்திலிருந்துகொண்டு பிரச்னைகளைக் கிளப்பிவிடுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஜோர்டான் மன்னர் அம்மானிலிருந்து புறப்பட்டு கெய்ரோவந்து அங்கிருந்து டிரிபோலிக்குப் புறப்பட்டார்.

இதற்கிடையில் ஜோர்டானின் முன்னாள் ராணுவத் தளபதி திடீரென லண்டனுக்குப் பிரயாணமாகியிருக்கிறார். சமீபத்தில் ஜோர்டானிய படைகளுக்கும் அரபுக் கொமாண்டோ படைகளுக்குமிடையில் மோதல்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து இவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். பதவியிலிருந்துவிலக்கப்பட்டபோதிலும் மன்னர் ஹுசேனுக்கு அவர் நெருங்கிய ஆலோசகராக இருந்துவந்தார்.

### அமைதியாக வாழ விருப்பம்

இஸ்ரேலிய பிரதம மந்திரி திருமதிகோல்டாமேயர் இஸ்ரேல் அண்டையிலுள்ள அரபு நாடுகளுடன் அமைதியாக வாழ்வதையே விரும்புகிறது என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

### சூயஸ்கால்வாய் பற்றி யூ: எஸ். தூதர்

மேற்காசியாவில் அமைதி நிலவவேண்டும் என்றே அமெரிக்காவிரும்புகின்றது. என்று ஐ. நா. வில் உள்ள அமெரிக்க தூதர் பேட்டியொன்றில் குறிப்பிட்டார். சூயஸ்கால்வாய் திறக்கப்படுவது உட்பட மேற்காசியாவில் உண்மையான அமைதி ஏற்படவேண்டும் என்றே அமெரிக்கா விரும்புகின்றது என்று அவர் கூறினார்.

### இஸ்ரேலியர் தாக்குதல்

இஸ்ரேலிய விமானங்கள் நேற்று ஐக்கிய அரபுக் குடியரசு நிலைகள்மீது கடும் தாக்குதல்களை நடத்தியதாக இஸ்ரேலியர் அறிவித்தனர். சூயஸ்கால்வாய்க்கு குறுக்கே பறந்து சென்று இஸ்ரேலிய விமானங்கள் தாக்கியதாக அறிவித்தனர்.

அரபுக் கொமாண்டோக்கள் இஸ்ரேலியரின் மூன்று நிலைகள்மீது நேற்று தாக்குதல்களை நடத்தியதாக அறிவித்தன. இதில் இஸ்ரேலியருக்குப் பலத்த சேதம் விளைவிக்கப்பட்டதாகவும் அறிவித்தனர். இஸ்ரேலியரின் சுற்றுலா பஸ் ஒன்றின் மீதும் கொமாண்டோக்கள் பதுங்கியிருந்து தாக்குதல்களை நடத்தியிருக்கிறார்கள். ஆனால் இந்தத் தாக்குதலில் எவரும் காயமடையவில்லையென்று இஸ்ரேலியர் கூறினார்கள்.

இஸ்ரேலில் அரபு நாடுகளுடனான சண்டை நிறுத்த எல்லைப்பகுதிகளில் பாடசாலை பஸ்களை சேவைக்கு விடவேண்டாம் என்று இஸ்ரேலிய துணைப்பிரதமர் திரு அலன் உத்தரவிட்டிருக்கிறார் அண்மையில் இஸ்ரேலிய பாடசாலை பஸ் ஒன்றின் மீது அரபுக் கொமாண்டோ தாக்குதல் நடத்தியதில் பல பாடசாலைப் பிள்ளைகள் பலியானதின் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

# சிறிய பாடசாலைகளிலும் விஞ்ஞான போதனை

பருத்தித்துறை, திங்கள் ''விண்வெளிச் சகாப்தம் எனக் கூறப்படும் இன்றைய காலகட்டத்தில் விஞ்ஞானத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தவேண்டியதில்லை. இன்று விஞ்ஞானப்பகுதியில் எதிர்பார்த்தளவுக்கு மேல் மாணவரின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. பொருளாதாரப் பிரச்னைகள் தொடர்ந்து அதிகரித்துச் சிக்கலாகக் கூடிய எதிர்காலத்தில் விஞ்ஞானத்தின் முக்கியத்துவம் மேலும் வளரும். விஞ்ஞானம் இவ்வுலக வாழ்வுக்கு மட்டுமன்றி மறுமைக்கும் உதவக்கூடியதாகும்.''

இவ்வாறு நெல்லியடி மகாவித்தியாலயத்தில்நடைபெற்ற வடபகுதிக் கல்லூரிகளின் விஞ்ஞானப் பொருட்காட்சியை ஆரம்பித்து வைத்த வடமாநில உதவிக் கல்வியதிபதி திருமதி ஆர். எஸ். பாமர் கூறினார்.

தொடர்ந்து பேசிய திருமதி பாமர், விஞ்ஞானக் கல்வி கல்லூரிகளில் மட்டுமன்றி, சாதாரண சிறிய பாடசாலைகளிலும் போதிக்கப்படுவதற்கு வசதிசெய்து வைக்கவேண்டும் என்றும் கூறினார்.

திரு. எம். அற்புதநாதன் நன்றி கூறினார்.

# "சுகதேகிகளாக வாழ..."

சங்கானை, திங்கள் 'பெரும்பான்மை மக்கள் நோய்த்தடுப்பு முறைகளையும் சுகாதார வசதிகளையும் தகுந்த முறையில் கையாளுவதில்லை, இதனால் பலதரப் ...

... பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சங்கானைப் பட்டினசபைத் தலைவர் திரு சி. வைரமுத்து தலைமையில்விழா நடைபெற் ...

# நக்ஸல்பாரிகளை எதிர்த்து அரசாங்கம்போராடும்

## இந்திரா அறிவிப்பு

பாட்னா, ஜூன் 22 வன்முறைகளில் நம்பிக்கை வைத்துள்ள சக்திகள் தோன்றியிருப்பதே சமீபகாலத்தில் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள மிகப்பெரிய ஆபத்துக்களில் ஒன்றாகும் நக்ஸல்பாரித்துவம் தோன்றியிருப்பது அபாயகரமானதாகும்: முழு உறுதியுடனும் வலிமையுடனும் நக்ஸல்பாரிகளை எதிர்த்து அரசாங்கம் போராடும்.

பாட்னாவையொட்டியுள்ள குல்ஜார்பாகில் கங்கைநதியில் ஒருபாலம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டிய பின்பு கங்கையின் தென் கரையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் பிரதமர் இந்திராகாந்தி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

வறுமையை யொழித்து சோஷலிச லட்சியத்தை நோக்கி மக்கள் முன்னேற விரும்பினால் அவர்கள் வன்முறைச் சக்திகள் பற்றி உஷாராயிருந்து அவற்றை முறியடிக்கவேண்டும். வகுப்புவாதவன்முறை அரசியல் வன்முறை இரண்டுமே ஜனநாயகத்துக்கும் சோஷலிசத்துக்கும் அபாயம் விளைவிக்கக்கூடியவை என்று இக்கூட்டத்தில் கூறிய பிரதமர் இந்திராகாந்தி, மேலும் தொடர்ந்து பேசுகையில் இந்தியாவின் முன்புள்ள அடிப்படையான பிரச்னை வறுமையே என்றும் வறுமையை ஒழித்து சுபிட்சத்தை அடைவது உடனடியாக நடக்கக் கூடியதல்லவென்றும், அதற்கு குறுக்கு வழிகள் இல்லையென்றும் ஆயினும் குறுக்குவழிகள் அபாயகரமானவை என்றும் கூறினார்.

# சஞ்சீவரெட்டி பற்றிப்பேச கருணாநிதிக்கு தகுதியில்லையாம்

## காமராஜர் தாக்குகிறார்

சென்னை, ஜூன் 22 'பஸ் போக்குவரத்தொன்றை அரசு மேற்கொண்டதற்காக சுப்ரீம் கோர்ட் கொடுத்த தீர்ப்பு தனது நிர்வாகத்தின்மீது களங்கம் சுமத்துவதாகக்கருதிதனதுமுதன் மந்திரிப்பதவியைச் துச்சமென மதித்து ராஜினாமாச் செய்தவர் சஞ்சீவ ரெட்டி. அவரைப்பற்றி பேசுவதற்கு கருணாநிதிக்கு என்ன தகுதி இருக்கிறது,

சத்தியமூர்த்தி பவனில் நடந்த இளைஞர் காங்கிரஸ் கூட்டத்தில் பேசுகையில் காமராஜர் மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

'வேலையில்லாப் பிரச்னை தான் இன்று பெரிய பிரச்னை நெசவாளர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், படித்தவர்கள் ஆகியவருக்கு வேலைவாய்ப்பு இல்லை. வேலையில்லாப் பிரச்னை தீர்க்கப்பட வேண்டுமாயின் மத்திய மாநில அரசாங்கங்கள் வேலைவாய்ப்புக்கான நிறுவனங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

பரமக்குடி மாநாட்டில் பேசிய பலர் தி. மு. க. ஊழல்பற்றிக் குறிப்பிட்டனர். சஞ்சீவரெட்டி பேசும்போது இதுபற்றிக் குறிப்பிட்டு நிர்வாகத்தில் ஊழல் நடந்திருப்பதாக புகார்கள் வரும்போது பொறுப்பில் உள்ளவர்கள் விசாரித்துப் பரிகாரம் தேட வேண்டும் என்று கூறினார். இதுதான் முதன்மந்திரி கருணாநிதிக்கு கோபத்தை உண்டாக்கிவிட்டது என்றும் காமராஜர் கூறினார்.

தி. மு. கவைப் போலத்தான் பிரிட்டிஷ் ஆட்சி சுதந்திரப் போராட்டநேரத்தில் அகம்பாவமாத நடந்து கொண்டது. நமது பொறுமையைச்சோதிக்கும் அளவு தொல்லைகள் கொடுத்தார்கள். தொண்டர்களுக்கு ஆத்திரமும் கோபமும் வந்தது. அப்போதுகாந்தி பொறுமையாக இருக்கும் படி கேட்டுக் கொண்டார். அப்படித்தான் இன்றும் நீங்கள் பொறுமையாக இருக்கும் படி கேட்டுக் கொள்கிறேன் என்று காமராஜர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

# 'பதவியை விட்டு விரட்டுவோம்'

''காமராஜரின் கட்டளைப்படி தமிழ் நாட்டில் காங்கிரஸுக்கு பத்து லட்சம் உறுப்பினர்களைச் சேர்ப்போம் பத்து லட்சம் புதிய உறுப்பினர்கள் சேர்ந்ததும் ஒரு சில முதன் மந்திரிகள் தங்களது உடல் நோயை காட்டி பதவியை ராஜினாமா செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை'' பரமக்குடியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் பேசிய ஈ. வெ. கி. சம்பத்மேற்கண்டவாறு கூறினார்.

### "விளம்பரப்பிரியர் கருணாநிதி"

கடைசியாக ஒரு போஸ்டர் வந்தது அதில் கருணாநிதிக்கும் பின்னால் ஒளிச்சக்கரம் அதாவது கிறிஸ்து நாதருக்குப் பின்னால், மற்றும் சாமிகளுக்குப்பின்னால் இருப்பது போன்று ஒளிச்சக்கரம் அமைக்கப்பட்டுள்ளது இது கருணாநிதிக்குத் தெரியாது போடப்பட்டிருக்காது. விளம்பரப்பிரியர் கருணாநிதி என்பது எனக்குத்தெரியும் என்று அவர் கூறினார்.

திருமதி அனந்தநாயகி இக் கூட்டத்தில் பேசுகையில் மத்திய மாநில அரசுகளின் போக்கு சர்வாதிகாரமாகவுள்ளது என்றும் மக்க ...

# சுகர்னோவின் இறுதிச்சடங்கு

## இராஜ மரியாதையுடன் நடைபெறும்

ஜாகர்த்தா, ஜூன், 22 இந்தோனேஷியாவின் காலஞ்சென்ற அதிபர் சுகர்னோவின் சடலத்தை சகல அரசமரியாதைகளுடனும் அடக்கம் செய்வதற்கு இந்தோனேஷிய அரசாங்கம் முடிவுசெய்திருக்கின்றது.

உயிர் வாழ்ந்த பொழுது அவருக்கு மறுக்கப்பட்டிருந்த சகல அரசமரியாதைகளும் இறந்தபின் வழங்கப்படுகின்றன.

டாக்டர் சுகர்னோவின் பூதவுடலுக்கு நேற்று ஆயிரக்கணக்கான இந்தோனேஷிய பிரஜைகள் இறுதி மரியாதைகளைச் செலுத்தினார்கள்.

ஒரு காலத்தில் உலக அமைதிக்கே சவால்கொடுக்கும் நிலையில் இருந்தவரும், ஐ. நா.வையும், அமெரிக்கா ...

... திருமணங்களில் கலந்து கொள்வதற்காக இருதடவைகள் குறுகியகால அளவில் அவகாசம் அளிக்கப்பட்டார்.

சுகர்னோவைத் தொடர்ந்து பதவிக்கு வந்த ஜெனரல் சுகார்டோ அவர் மீது வழக்குத் தொடர்வதை விரும்பவில்லை. நாட்டின் விடுதலையைத் தேடிக் கொடுத்த அவர் கடைசிக் காலத்தில் இழை[illegible]விட்ட தவறுக்காக இந்தோனேஷியர்கள் நீதிமன்றத்தில் ஏற்றி தண்டனைக்குள்ளாக்க விரும்பவில்லை.

15 ஆண்டுகாலமாக அவர் சிறுநீரகக் கோளாறினால் அவதிப்பட்டுவந்தார், அறுவைச் சிகிச்சை செய்தால் மரணம் ஏற்படும் என்று சாஸ்திரி ஒருவன் தெரிவித்த எச்சரிக்கையை நம்பி அறுவைசிகிச்சைக்கு அவர் ம[illegible]து தாராம்.

# இந்தியாவில் விரைவில் தேர்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கானை, திங்கள்

'பெரும்பான்மை மக்கள் நோய்த்தடுப்பு முறைகளையும் சுகாதார வசதிகளையும் தகுந்த முறையில் கையாளுவதில்லை, இதனால் பலதரப்பட்ட நோய்களுக்கு அவர்கள் ஆளாகவேண்டியேற்படுகின்றது. அரசாங்கம்விசேடமாக சுகாதாரப்பிரிவுக்கென பெருந்தொகையான பணத்தைச் செலவிட முன்வந்துள்ள இவ்வேளை சுகாதாரப் பகுதியினரால்வழங்கப்படும் நல்ல ரகமருந்துகளை தகுந்த வேளைகளில் பாவிப்பதுடன் நோய்த்தடுப்பு முறைகளையும் சுகாதார வசதிகளையும் நன்கு பயன்படுத்தினால் நாமும் எமது எதிர்காலச் சந்ததியினரும் சுகதேகிகளாக வாழ வழி ஏற்படும்'.

இவ்வாறு மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். இரகுநாதன் சங்கானை நிகரவைரவர் ஆலய முன்றலில் நடைபெற்ற சுகாதார விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சங்கானைப் பட்டினசபைத் தலைவர் திரு சி. வைரமுத்து தலைமையில்விழா நடைபெற்றது குடும்பநலத்திட்டபகுதியைச் சேர்ந்த திருமதி யோகா பாலச்சந்திரன்பேசுகையில் தாய்மார்கள்குடும்ப நலத்திட்டத்தை அனுஷ்டிக்கவேண்டிய அத்தியாவசியத்தை விளக்கினார்

சுகாதார மேற்பார்வையாளர் திரு என். சந்தணராசா சுகாதார பரிசோதகர் திரு. ஏ ஏ யோன் யாழ்ப்பாண கயரோக நிவாரணச் சங்கச்செயலாளர் திரு யு. என். தேவகடாட்சம் ஆகியோர் உரையாற்றினர்.

சுகாதாரப் பொருட்காட்சியும் குடும்பநலத்திட்ட படக்காட்சியும் சுகாதாரம் சம்பந்தமான இரு நடகங்களும் இவ்விழாவில் இடம் பெற்றன.

## யாழ். பஸ் டிப்போ

# உத்தியோகத்தர் சிலரை இடம்மாற்றக்கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்

இலங்கைப் போக்குவரத்துச்சபை யாழ்ப்பாணம் டிப்போவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் சிலரை உடனடியாக இடமாற்றம் செய்யவேண்டும் என்று பஸ் தொழிலாளர் சபை இலங்கைப் போக்குவரத்துச்சபை தலைவர் திரு. அனில் முனசிங்காவிடம் கோரியுள்ளது.

சமசமாஜக்கட்சி தொழிற் சங்கக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடந்த பஸ் தொழிலாளர் சபைக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது

சுதந்திரக்கட்சி தொழிற் சங்க வடபகுதி பிரதிநிதி திரு. மா நடராசா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் பஸ் தொழிலாளர் கமிட்டி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்

தீர்மானத்தின் முழு விபரமும் வருமாறு:-

5 ஆண்டு காலமாகத் தொழிற்சங்கங்களின் முறையான உரிமைகளை நிலைநாட்ட எதிர் நடவடிக்கைகள் எடுத்துவந்தும், கருங்காலிகள் மூலம் தொழிற் சங்க நடவடிக்கைகளை முறியடித்தும் வந்த யாழ்ப்பாணம் இ போ சபையில் கடமையாற்றும் சில உத்தியோகத்தர்களையும் சிலபதில் உத்தியோகத்தர்களையும் உடனடியாக வடபிரதேசத்திற்கு அப்பால் இடமாற்றம் செய்யவேண்டும் என்று இ போ ச தலைவரை இச்சபை கேட்டுக்கொள்கிறது

# பொலிசாரைதாக்கியவருக்கு 6 மாதச் சிறை

ஊரதீவு, திங்கள்

ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிசாரைத் தாக்கியவருக்கு ஊர்காவற்றுறை நீதவான் ஆறுமாதச் சிறைத் தண்டனை விதித்தார்.

இவ்வழக்கை ஊர்காவற்றுறைப் பொலிஸார் தாக்கல் செய்திருந்தனர். எதிரியான வேலணை கிழக்கைச் சேர்ந்த முத்துக்குமாரு குலசேகரம் என்பவரை வேறொரு குற்றத்தின் நிமித்தம் கைது செய்யச் சென்றனராம். அப்போதே அவர் மேற்படி பொலிசாரைத் தாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரியான முத்துக்குமாரு குலசேகரம் குற்றத்தை ஒப்புக் கொள்ளவே நீதவான் எதிரிக்கு ஆறுமாதச் சிறைத் தண்டனை விதித்தார்.

---

ஷிய பிரஜைகள் இறுதி மரியாதைகளைச் செலுத்தினார்கள்.

ஒரு காலத்தில் உலக அமைதிக்கே சவால்கொடுக்கும் நிலையில் இருந்தவரும், ஐ. நா. வையும், அமெரிக்காவையும் உதாசீனம் செய்தவருமான டாக்டர் சுகர்ணோ. உலகமே புறக்கணித்துவிட்ட நிலையில் மரணமானார்.

3,000 தீவுகளையும் 200 மொழிகள் பேசும்இனங்கள், கலாசாரங்களையும் ஒருங்கிணைத்து இந்தோனேஷியகுடியரசைக் கட்டியெழுப்பிய டாக்டர் சுகர்ணோ இறுதி காலத்தில் தேசத்துரோகி போல் காலம் கழிக்கநேர்ந்தது.

தேசத்தின் விடுதலைக்காக உழைத்த அவர் இறுதிகாலத்தில்கம்யூனிஸ்ட் புரட்சியில் சம்பந்தப்பட்டார் என்று கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டார்.

பிரசங்கத் திறமையாலும் சிந்தனை உழைப்பினாலும் முன்னுக்குவந்த அவர் இளம் பெண்களின் மத்தியில் காலத்தைப் போக்கும் அவல நிலைக்குத்தன்னை ஆட்படுத்திக் கொண்டதால் முன்னர் பெற்ற சிறப்பையெல்லாம் இழந்தார்.

1901-ம் ஆண்டு ஜூன் மாதம் ஆறும் திகதி ஓர் ஆசிரியரின் மகனாக அவர் பிறந்தார்.

அவர் தம் வாழ்வில் ஏழு பெண்களைமணந்தார். இவர்கள் ஒவ்வொருவருமே அவரைப்படிப்படியாக கைவிட்டுப் போனார்கள் ஹார்த்தினி மாத்திரம் அவருக்கு விசுவாசமாக விருந்தார் இவர்தான் சுகர்ணோவைக் கம்யூனிஸத்தின்பால் இழுத்துச் சென்றார் என்று இந்தோனேஷியர்கள் குற்றஞ் சாட்டுகிறார்கள். கடைசிக்காலத்தில் டாக்டர்களோடும், காவலர்களோடும் அவர் காலத்தைப் போக்கினார். எப்போதாவது பேரப்பிள்ளைகள் அவரைப் பார்க்கவருவார்கள். 1969ம் ஆண்டில் அவரது இருபெண்பிள்ளைகளின்

## தீவிர கம்யூனிஸ்ட் கைது

சென்னை, ஜூன், 22

சில தினங்களுக்கு முன்பு சென்னைநகரில் அதிதீவிர கம்யூனிஸ்ட் என்று சொல்லப் படும் ராஜன் என்பவரைபொலிசார் கைதுசெய்தனர். ராயப் பேட்டையில் வசிக்கும் அவரிடமிருந்து மா - சே - துங் புகைப்படங்களையும் பிரசார வெளியீடுகளையும், கம்யூனிஸ்ட் நூல்களையும் பொலிசார்கைப்பற்றினர். அவரைப்பொலிசார் வைத்துள்ளனர்.

---

இந்தோனேஷியர்கள் நீதி

சைக்கு அவர் ம... து தாராம்.

## இந்தியாவில்

# விரைவில்தேர்தல் நடைபெறும்?

பாட்னா, ஜூன், 22

எல்லோரும் நினைப்பதைக் காட்டிலும் வெகுவிரைவில் இந்தியாவில் பொதுத் தேர்தல் வரக்கூடுமென்று பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி காங்கிரஸ் கூட்டத்தில் கூறியதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

புதுக்காங்கிரஸின் ஜில்லா கமிட்டித்தலைவர்கள், காரியதரிசிகள் எம் பிக்கள் எம் எல். ஏக்கள் ஆகியோர் அடங்கிய ரகசிய கூட்டமொன்றில் இவ்வாறு கூறியதாக தெரிகிறது.

## உலகில்

# உணவு உற்பத்தியில் இந்தியா முன்னணியில்

ஹேக், ஜூன் 22

அபிவிருத்தி அடையும் நாடுகளில் ஒரு சிலவற்றிலேயே சென்றவருஷம் கணிசமான விவசாயமுன்னேற்றம் எற்பட்டிருப்பதாகவும் அந்த ஒருசில நாடுகளில் இந்தியா ஒன்று எனவும் ஐ. நா. சபை உணவு விவசாய ஸ்தாபன டைரக்டர் ஜெனரல் கடெகே கூறியுள்ளார்,

பசுமைப் புரட்சி என்பது அமெரிக்கா வைத்த பெயரென்றும் தொழில் அபிவிருத்தி ஏற்பட்ட நாடுகளில் இந்தப் புரட்சி ஏற்படவில்லையென்றும் அவர் கூறினார். அதிக விளைச்சல் உள்ள பயிர்வகைகள் இருந்தும் கூடபோன வருடஉற்பத்தி இந்தியாவை தவிர மற்றை நாடுகளில் மோசமாக இருந்தது எனவும் கூறினார்.

## கடற்றொழில் கூட்டுத்தாபன நிர்வாகசபை

கோட்டை, திங்கள்

கடற்றொழில் அமைச்சர் திரு. ஜோர்ஜ் ராஜபக்ஷ கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்குப் புதிய நிர்வாகிகள் சபையொன்றை நிறுவியிருக்கிறார்: கூட்டுத்தாபனத்தின் தலைவராக கடற்றொழில் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு ஈ. ஜி. குணவர்த்தனநியமிக்கப்பட்டிருக்கிறார். டாக்டர் சேனவிக்கிரமசூரியா, நீர்ப்பாசன மின்சார நெடுஞ்சாலைகள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு: எம்: சந்திரசேனா, திரு: எல்: ஐ: ஜே: சில்வா ஆகியவர்கள்: இதர உறுப்பினர்கள்: திரு: சில்வா கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## கொள்ளைகோஷ்டி பெண்கள் கைது

சென்னை, ஜூன் 22

தமிழ்நாட்டில் பல இடங்களில் கொள்ளை சம்பவங்களை நடாத்திய பரோடா கொள்ளைக் கோஷ்டியைச் சேர்ந்த ஐந்து பெண்களைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர். குஜராத்தி போன்ற மொழிகள் பேசும் இவர்களுக்கு 30 வயதுக்கு மேல் இருக்கலாமென நம்பப்படுகிறது.

## கம். ச. சோ. மோதல்

மதுனபுரி, ஜூன், 22

கேஷியாரியாவில் ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளர்களுக்கும் ச. சோ. கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையே ஏற்பட்டமோதலில் 6 பேருக்கு குண்டுகளால் காயமேற்பட்டுள்ளது. இவர்களின் மூவர் நிலை கவலைக்கிடமாயுள்ளது. மோதலுக்கு காரணம் என்னவென்பதுதெரியவில்லை. இது சம்பந்தமாக எவரும் கைது செய்யப்படவில்லை.

## தொண்டர்குழு செல்கிறது

பண்டத்தரிப்பு, திங்கள்

மடுத்திருப்பதியில் நடைபெறவிருக்கும் திருவிழாக்களை முன்னிட்டு இவ்வாரம் விசேட தொண்டர் குழு ஒன்று செல்லவிருக்கிறது. பக்தர்களின் சமயவழிபாடு சுகாதார வசதிகளை இத்தொண்டர் குழுவினர் கவனிப்பர் எனத் தெரிகிறது.

---

வேண்டும்.

பரமக்குடி மாநாட்டில் பேசிய பலர் தி. மு. க. ஊழல்பற்றிக் குறிப்பிட்டனர். சஞ்சீவரெட்டி பேசும் போது இதுபற்றிக் குறிப்பிட்டு நிர்வாகத்தில் ஊழல் படுவதற்கில்லை" பரமக்குடியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் பேசிய ஈ. வெ. கி. சம்பத்மேற்கண்டவாறு கூறினார்.

### "விளம்பரப்பிரியர் கருணாநிதி"

ஏழைகளின் அரசு, தொழிலாளிகளின் அரசு என்றெல்லாம்தங்களைக் கூறிக்கொள்ளும் கருணாநிதி பிறந்தநாள் விழாவைக் கொண்டாடும் வகையில் வாரத்திற்கு ஒரு போஸ்டர் போட்டார்கள் விளம்பரப்பிரியர் கருணாநிதி என்பது எனக்குத்தெரியும் என்று அவர் கூறினார்.

திருமதி அனந்தநாயகி இக் கூட்டத்தில் பேசுகையில் மத்திய மாநில அரசுகளின் போக்கு சர்வாதிகாரமாகவுள்ளது என்றும் மக்களின் வாழ்வுக்கான உத்தரவாதம் இல்லையென்றும் இத்தகைய சீர்கேடுகளை அதற்ற சர்வாதிகாரக்கும்பல்களை வெகுவிரைவில் மாற்றவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## வடமராட்சியில் கலைவிழா

நெல்லியடி, திங்கள்

பருத்தித்துறைக் காரியாதிகாரி திரு. மு. தம்பிமுத்துவின் முயற்சியால் வடமராட்சியில் ஒரு கலைமாமன்றம் அமைக்கப்பட்டுள்ளது இந்தக்கலைமாமன்றத்தில் வடமராட்சி வட-கிழக்கிலுள்ள 24 கலைமன்றங்கள் அங்கம் வகிக்கின்றன.

இந்தக் கலைமாமன்றம் காரியாதிகாரி திரு. மு. தம்பிமுத்துவை தலைவராகக் கொண்டுள்ளது. அண்மையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலைமன்றங்களிடையே நடத்தப்படும், நாடக, சங்கீத, நடனப் போட்டிகளில் தெரிவுசெய்யப்படும். இளம் கலைஞர்களின் நிகழ்ச்சிகள் இந்தக் கலை விழாவில் இடம்பெறவுள்ளன.

விவாதம், கருத்தரங்கம் சங்கீதம், நடனம், நாடகம் முதலான நிகழ்ச்சிகள்அடங்கிய கலைவிழா ஆகஸ்ட் மாதம் 27, 28, 29ம். திகதிகளில் வடமராட்சியில் நடைபெறவிருக்கின்றது.

இந்த நிகழ்ச்சிகளையும் திட்டங்களையும்வகுப்பதற்கு 13 பேர் அடங்கிய விழாக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## நோயாளிகள் கஷ்டம்

அம்பன், திங்கள்

அம்பன் அரசினர் வைத்தியசாலையிலுள்ள நீர் நிரப்பும் இயந்திரம் இரண்டு மாத காலத்திற்கு மேலாக பழுதடைந்த நிலையில் இருக்கின்றமையினால் வைத்திய சாலையில் குழாய்நீர் விநியோகம் தடைப்பட்டிருக்கிறது. இதனால் வைத்திய சாலையில் தங்கும் நோயாளிகள் கைவாளி மூலம் தண்ணீர் எடுத்து தங்கள்தேவைகளுக்கு பாவிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இதையிட்டு வைத்திய சாலைப் பொறுப்பதிகாரி சுகாதாரப் பகுதி மேலதிகாரிகட்கு அறிவித்தும் நடவடிக்கை எதுவும் எடுக்கப் படவில்லையெனத் தெரிகிறது.

# யாஹ்யாக்கான் மாஸ்கோபுறப்பட்டார்

இஸ்லாமபாத், ஜூன் 22

பாகிஸ்தான் அதிபர்ஜெனரல் யாஹ்யாக்கான் சோவியத் தலைவர்களுடன் ஆலோசனைகள் நடத்துவதற்காக இன்று காலையில் மாஸ்கோவுக்குப் புறப்பட்டார்.

மாஸ்கோவில் சோவியத் அதிபர் பொட்கர்னியும் இதர தலைவர்களும் அவரை வரவேற்பார்கள்.

இனறு பிற்பகல் ஜெனரல் யாஹ்யாக்கான் கிரெம்ளினில் சோவியத் தலைவர்களுடன் ஆலோசனைகளை ஆரம்பிப்பார்.

தாஷ்கண்ட் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தியாவுக்ும்பாகிஸ்தானுக்குமிடையிலானஉறவுகளைப் பலப்படுத்துவது, மற்றும் மேற்காசிய இந்தோனேஷிய போன்ற விஷயங்களும், பாகிஸ்தானுக்கான சோவியத் உதவிகளை அதிகரிப்பது பற்றியும் இந்தப் பேச்சுக்களின்போது ஆலோசிக்கப்படுமென்று எதிர்பார்க்கபுபடுகின்றது.

## பெண் தற்கொலை

கைதடி, திங்கள்

சின்னப்பிள்ளை கனகன் என்னும் 50 வயது மாது நச்சுத்திராகவம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார். மேற்படி சம்பவம் கைதடிதெற்கு சனசமூகநிலையத்திற் கருகாமையில் நடந்தது.

இறந்தவரின் கணவரான கனகன் வேலன்சாட்சியமளிக்கும் போது. இறந்தவரான சின்னப்பிள்ளையை 30 வருடங்களுக்கு முன்தாம் திருமணம் செய்ததாகவும் குழந்தைகளில்லாத குறையும் 10 வருடங்களாக இருந்துவரும் மாறாதவயிற்றுவலியுமே தமது மனைவிக்குக் கவலையாயிருந்ததென்றும் தமதுமனைவியின் மரணத்திற்கு வேறு காரணமிருக்க முடியாதென்றும்சொன்னார்

பிரேத பரிசோதனை நடத்திய டாக்டர் திரு. அம்பலவாணர் வைத்திலிங்கம் உட்படப்பலர் சாட்சியமளித்தபின் சாவகச்சேரித் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. கே. கதிர்காமசேகரர் தற்கொலை யெனத் தீர்ப்பளித்தார்.

## காயமடைந்த வாலிபர் மரணம்

கொழும்பு, திங்கள்

சின்னபொரளையில் கடந்த வாரம் நடந்த பொலிஸ் பொதுமக்கள் மோதலில் படுகாயமடைந்த வாலிபர் நேற்று முன்தினம் மரணமானார். இதைத் தொடர்ந்து ஆத்திரம் கொண்ட வாலிபர் கோஷ்டியினர் பயங்கர ஆயுதங்களுடன் போக்குவரத்தை தடை செய்தனராம்.

நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா அவ்விடத்திற்கு விஜயம் செய்து நடவடிக்கை எடுப்பதாகவாக்குறுதியளித்ததைத் தொடர்ந்து அவ்வாலிபர் கோஷ்டி கலைந்து சென்றது.

கொலம்பகே சோமபாலா என்ற வாலிபர்தான் மரணமடைந்த நபராகும்.

## கம்யூ. வாலிபர் சங்க உறுப்பினர்

யாழ்ப்பாணம், செவ்.

சுழிபுரம் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தின் சங்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. புது வருடஉத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் ஆ. கிருஷ்ணமூர்த்தி இணைச் செயலாளர் டாக்டர் பூ. நாகநாதன், ஆ. சண்முகநாதன் பொருளாளர் வி. எஸ். கந்தசாமி 7 பேர் கொண்ட நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

பணத்தின் மீது நாம் பற்றுதல் வைக்கும்போதே அது நம் கவலைக்குக் காரணமாகின்றது. இன்றேல் பணம் மக்களின் நன்மைக்காகப் பயன்படக்கூடிய பெரிய சக்தியாகும். — சுவாமி ராமதாஸ்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna:
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆனி மாதம் 9-ந்திகதி (23-6-70)


## பொருளாதாரத் தீர்வு

வெள்ளைக்காரர் இங்கு ஆட்சிசெய்தகாலத்தில் சிறப்பாகத் தமிழர், ஆங்கிலம் கற்று அரசாங்க உத்தியோகங்களுக்குத் தங்களைத் தயார்படுத்திக் கொண்டார்கள். வாழ்க்கைக்கு அதையே பெரிதும் நம்பி இருந்தனர். ஆனால் நாடு சுதந்திரமடைந்தபின், இலவசக்கல்வி வந்து, நிலைமை அடியோடு மாறிவிட்டது. இனி அரசாங்க உத்தியோகம் கிடைப்பது குதிரைக்கொம்பு. வேறு தொழில்களுக்கான வாய்ப்புகள் இல்லாத நிலையில் தமிழ் வாலிபர்கள் மனம் உடைந்து தங்கள் எதிர்காலம் பற்றி திகைத்திருக்கின்றனர். இதை உணர்ந்து, இந்தக் கஷ்டத்தை ஓரளவாவது தீர்த்து, அவர்களுக்குப் புதிய நம்பிக்கை அளிப்பதில்தான் வகுப்புப் பிரச்னையின் தீர்வும் புதிய அரசாங்கத்தின் வெற்றியும் நாட்டின் அமைதியும் அடங்கி இருக்கும்.

இது சுலபமான வேலையன்று கைத்தொழில், கடற்தொழில், குடிசைத் தொழில் அமைசுகள் கலந்து யோசித்து, நம் வாலிபர்களுக்கு மாற்றுவேலைகள் கிடைக்கக்கூடிய வழிவகைகளைச் செய்தல் அவசியம். சென்ற அரசாங்க ஆட்சி காலத்தில் முக்கிய கைத்தொழில்களில் அநேகமாக எல்லாம் கொழும்பிலும், கொழும்புக்குப் பக்கத்திலுமே ஸ்தாபிதமாகி நடக்கலாயின. ஆகவே வடக்கு, கிழக்கு, தெற்கு முதலிய பகுதிகளிலிருந்து பல வாலிபர்களும் வேலை தேடி கொழும்புக்குச் செல்ல வேண்டியதாயிற்று. தலை நகரில் ஜனநெருக்கம் அதிகரித்து குடியிருப்பு முதலிய பிரச்னைகள் அதிகரித்தன. தூரஇடங்களிலிருந்து வந்தவர்களின் சங்கடங்களை விளக்கத் தேவையில்லை. இந்த பிரச்னையைக் குறைக்க யாழ்ப்பாணம், திருகோணமலை, காலி முதலிய துறைமுகப்பட்டணங்களுக்குப் பக்கத்திலேயே இனி புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்கவேண்டும். அப்படிச் செய்தால், தமிழ் வாலிபர்கள் பலர், தங்கள் குடும்பங்களுடனேயே சேர்ந்து வாழக்கூடும். அவர்களது கஷ்டங்களும் குறையும்.

பெரிய கைத்தொழில்கள் ஒருபுறமிருக்க, மின்சாரம் யந்திரசக்திகளால் இயங்கும் நவீன குடிசைக் கைத்தொழில்களை ஜப்பானைப் பின்பற்றி பரப்புவதால் பலருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும். உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களை அரசாங்கம் ஆதரிப்பதுடன், நாட்டில் சுதேசி இயக்கத்தை ஆரம்பித்து சுதேசிப் பொருள்களையே பொதுமக்களும் கூடுமானவரை வாங்கமுற்பட்டால், நமது பொருளாதாரச் சிக்கல்கள் பெருமளவில் குறையும். நமது முக்கிய தேவைகளான உணவு, உடை இவற்றுக்கு இனி அந்நியநாடுகளை எதிர்பாராமல், நாமே சுயதேவையைப் பூர்த்தி செய்தோமாயின் செலாவணி மிச்சப்படுவதுடன், நமது பொருளாதாரமும் மேம்பட்டு, வகுப்பு முதலிய பிரச்னைகளும குறையக் கூடும்.

## பிரேஸில் வெற்றி

உலக உதைபந்தாட்டப் போட்டியிலே தென்னமெரிக்காவைச் சேர்ந்த பிரேஸில் மூன்றும் முறையும் வெற்றி ஈட்டி புகழ் நல்ல முன்மாதிரியாகும் நாம் அளவில் சிறிதாக இருக்கலாம். என்றாலும் திறமைமிக்க வாலிபர்களுக்கு இங்கு பஞ்சமில்லை.

# சைவமும் தமிழும் வளர்த்துச் சிறந்த சபாபதி நாவலர்

**இன்று சபாபதி நாவலரின் பிறந்த ஊராகிய கோப்பாயிலுள்ள இலுப்பையடி விநாயகராலய முன்றலில் நடைபெறுகின்ற அன்னாரது நினைவு விழாவையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது**

— ச. விக்கினேஸ்வரன் —

எமது நாட்டிலிருந்து தமிழ்நாடு சென்று அங்கே எம்நாட்டுப்புகழை நிலைநாட்டிய பெரியார்களுள் சபாபதி நாவலரும் ஒருவர். இவர் மறைமலையடிகள் போன்ற தமிழகத்து அறிஞர் பெருமக்கள் பலராலும் பாராட்டப்பட்டிருப்பதோடு அந்நாட்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் அழியாஇடம் பெற்றிருக்கிறரென்றால் அது நம்மில் பலருக்கும் வியப்பைத்தருவதாக இருக்கும்.

**இளமைக் கல்வி**

யாழ்ப்பாணத்திலுள்ள கோப்பாய் என்னும்கிராமத்தி சுயம்புநாதரின் மகனாகப்பிறந்த சபாபதி நாவலர், ஜெகநாதையர் என்ற அறிஞரிடம் ஆரம்பக்கல்வி பெற்றார் அதன்பின் நீர்வேலிச் சிவசங்கர பண்டிதரிடம் வடமொழியும் தென்மொழியும் பயின்று அம்மொழிகளில் நிரம்பிய புலமை பெற்றார், இக்காலத்தில் இவருக்குக் கொடிய குன்மநோய் பிடித்தது. திருநாவுக்கரசு நாயனாரைவருத்திய சூலை நோய் திருவதிகை வீரட்டானத்திறைவன் அருளால் நீங்கியதுபோல் நமது சபாபதிநாவலரை வருத்திய நோயும் நல்லூர்க்கந்தன் அருளால் நீங்கியதாக அவரதுசரிதம் தெரிவிக்கிறது. இவ்வாறு நோய் நீங்கப்பெற்றநாவலர் தமிழ் நாடு சென்று திருவாவடுதுறை ஆதீனத்துச் சுப்பிரமணிய தேசிக சுவாமிகளின் அருளுபதேசம் பெற்றார் அங்கே பன்னிரண்டு ஆண்டுகள் சைவத்தமிழ் நூல்களைப்பயின்று இலக்கண இலக்கிய வேதாந்த சித்தாந்தங்களில் வல்லவரானார். இத்துறைகளில் இவர் பெற்றிருந்தபுலமையே இவரைப் பிற்காலத்தில் இவ்வாதீன வித்துவானாக்கியது.

**திருமணம்**

இக்காலத்தில் யாழ்ப்பாணம் வந்த சபாபதிநாவலர் தனது மாமன் மகளாகிய தையல்நாயகி அம்மையாரைத் திருமணம் செய்து சிலகாலம் இங்கே தங்கி சமயப் பிரசாரம் செய்தார் அக்காலத்தில் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் முன்றலில் இவர் ஆற்றிய ஒரு சொற்பொழிவு சைவத் தமிழ் உலகில் பரபரப்பை ஏற்படுத்தியது.

**நாவலர் பட்டம்**

நாவலர் மீண்டும் தமிழ் நாடு சென்று சமயப்பணியும் தமிழ்ப்பணியும் செய்து வந்தார். இவரது தமிழ் அறிவையும் சொற்பெருக்காற்றும் திறமையையும் கண்டுசுப்பிரமணிய யோகீந்திரர் ஞானசம்பந்த சுவாமிகள் இவருக்கு 'நாவலர்' என்னும் பட்டத்தைக் கொடுத்தார். அன்றுமுதல் இவர் 'சபாபதி நாவலர்' என அழைக்கப்பட்டு வரலாயினர்.

தமிழ்சைவ உலகிற்கு சிதம்பர புராணம் தொடங்கி திராவிடப்பிரகாசிகையீருக இருபது நூல்களைத் தந்த இவர், 'ஞானாமிர்தம்' 'சுதேசவர்த்தமானி' என்னும் இரு சஞ்சிகைகளை எவ்வளவோ இடர்ப்பாட்டுக்கிடையில் நடத்தி சைவத்தையும், தமிழையும்வளர்த்தார்.

**சேதுபதி தொடர்பு**

சபாபதி நாவலரின் தமிழ்ப்பணியையும் சமயப்பணியையும் கண்டசேதுபதி மகாராசா இவருக்கு மூவாயிரம் ரூபா சன்மானமாக வழங்கியதோடுஅச்சுக்கூடம் வைத்துப் பத்திரிகைகள், நூல்கள் வெளியிடுவதற்கு சிதம்பரம் செங்கழுநீர்ப் பிள்ளையார் வீதியில் இடவசதியும் அளித்தார்.

**மறைவு**

இவ்வாறு ஆறுமுகநாவலருக்கு இணையான நாவலராக விளங்கி சமயப்பணியும் தமிழ்ப்பணியும் செய்த சபாபதிநாவலர் 1903-ம் ஆண்டு அவிட்டநட்சத்திரத்தில் இறைவன் திருவடி நீழலை அடைந்தார். இவரது புகழ் குடத்து விளக்காக உள்ளது. அதை இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனைவரும் அறியும்வகையில் குன்றத்து விளக்காக ஏற்றிவைப்பது ஈழத்தமிழ் சைவமக்கள் ஒவ்வொருவரதும் இன்றியமையாத கடமையாகும்.

## சிறிமா-அரசில்தமிழர் நிலைமை பொதுமக்கள் மதிப்பீடு

புதிய அரசாங்கத்தின் கீழ் தமிழருடைய நிலைமை எவ்வாறிருக்கும் என்று வாழ்க்கையில் பல்வேறு படிகளிலுள்ள தமிழரை விசாரித்தபோது பின்வரும் அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டன.

1. தம்பிப்பிள்ளை நேசமணி (26) ஆசிரியை: நாட்டிலுள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஒழிந்துவிட்டால் சிங்களவரும் தமிழரும் ஒற்றுமையாக வாழ முடியும் என்பதே என் கருத்து. ஒருவருக்கு வயிறு நிறைய உணவும் வாழ்க்கையில இனிமையும் உண்டாகிவிட்டால் மொழி, மதம், இனம் முதலியவற்றைப் பற்றி அதிகம் சிந்திக்கமாட்டார். மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதையே சிறிமா அரசாங்கம் தனதுமுதற்குறிக்கோளாகக் கொண்டிருப்பதால் சிங்களவரும் தமிழரும் இனிமேல் ஒற்றுமையாகவும் சுபீட்சமாயும் வாழ்வார்கள் என்பது நிச்சயம். முந்திய அரசாங்கத்தில் இழுபறிப்பட்டுக்கொண்டிருந்த பல்கலைக்கழகப் பிரச்னையை ஒரு நொடியில் தீர்த்துவிட்டார் சிறிமா. இதிலிருந்து தெரியவில்லையா?

2. ஏரம்பு தம்பித்துரை (28) சுருட்டுத்தொழிலாளி: பெயரளவிலை சிறிமா அம்மா பிரதம மந்திரியாயிருந்தாலும் அரசாங்கத்தைக் கொண்டு நடத்தப்போறது இடதுசாரியள். என் எம்மும் பீட்டரும் இருக்கும் வரை தொழிலாளியளாகிய எங்களுக்கு ஒருவிமான பயமுமில்லை. புதிய அரசாங்கத்திலை எங்களுக்கு ஒருவித மான பயமுமில்லை, புதிய அரசாங்கத்திலை எங்களுக்கு கன நன்மைகள் கிடைக்கப் போறது நிச்சயம். எங்களுக்கு வேண்டியது அவ்வளவு தானே!

3, அன்னம்மா மதியாபரணம் (39) இல்லாள்; ஒரு பெண்பிள்ளை பிரதம மந்திரியாய் வந்திருப்பது பெண் குலத்துக்கே பெருமையும் நன்மையும்தானே! கிழமைக்கு ரண்டு கொத்தரிசி தரப் போகிறு, ஒண்டே முக்கால் ரண்டு ரூபாய் எண்டு காசு எண்ணிக் குடுத்து அரிசி வாங்கின எனக்கெல்லோ அதின்ரை அருமை தெரியும்? அதோடை கொத்தமல்லியும் பருப்பும் கூப்பனில்லாமல் கிடைக்கப் போகுது. மற்றச் சரக்கு கத்தில் பிளவு உண்டாகப் போகிறது. இதற்குக் காரணம் தமிழர்களேயன்றி சிறிமாவைக் குறை கூறிப் பிரயோசனமில்லை. எங்களுடைய சமூகத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளை சிதறடித்து தமிழர் எல்லோரும் சமம் என்று நாம் ஏற்றுக்கொள்ளும்வரை தமிழருக்கும் தமிழ்மொழிக்கும் ஆபத்துத்தான். சிங்களம் கற்று பௌத்தத்தில் சேர்ந்த தமிழர் அடுத்தபடியாக சிங்களவரோடுகலப்புமணம்செய்து கொள்வதற்கு வெகுநாளாகாது தமிழர் ஆங்கிலப் பெயர்களை வைத்துக்கொண்டதுபோல இவர்களும் சிங்களப் பெயர்களை வைத்துக் கொள்வார்கள். இப்படியே ஒரு ஐம்பது. நூறுவருடம் போய்விட்டால் தமிழினம் சிங்களவரோடு ஐக்கியமாகிவிடவும்கூடும். இந்த அரசாங்கத்தினுல் தமிழருக்கு உண்டாகக்கூடிய ஆபத்து இது ஒன்றேதான். மற்றப்படிக்கு அரசாங்கத்தின் சோஷலிஸக் கொள்கைகளினால் பொதுவாக நாடு சகல துறைகளிலும் முன்னேறும் என்பதில் சந்தேகமில்லை.

5 கந்வர் சின்னத்தம்பி (53) கமக்காரர்! சிறிமா 'அம்மா' தமிழருக்கு அள்ளிக் குடுத்திடுவா என்டு நான் நினைக்கவில்லை. வெளியூரிலை இருக்கிற தமிழருக்கு முந்தியைப் போலை பேந்தும் அடி விழுகுதோ ஆர் கண்டது? 1960-ம் ஆண்டிலை இவ வந்து வெட்டிப் பிடுங்கியது என்னத்தை? யூ.என்.பி. இருக்கும்வரை சண்டை சள்ளில்லாமல் ஒரு மாதிரி காலம் போட்டுது. இனி என்னென்ன நடக்குமோ, ஆருக்குத் தெரியும்? இவ்வளவு நாளும் வெறும் பெட்டியை தூக்கிக்கொண்டு ஓடிப்போய் கூப்பன் கடையிலை அரிசியை வாங்கிக் கொண்டுவந்தம், இனிமேல் இரண்டு கொத்தரிசி எண்டாலும் அதுக்கு காசு தேட வேணுமே? வாயளவிலை என்னவும் சொல்லலாம், ஆனல் சொல்லுறதை எல்லாம் செய்து காட்டிறது அவ்வளவு இலேசல்ல.

6 தம்பர் பொன்னுத்துரை(78) இளைப்பாறிய தமிழ்ப்பண்டிதர்: தமிழ் அழியப் போகுது தமிழ் அழியப் போகுது" என்று சிலர் கூக்குரலிடுகிறார்கள். தமிழ் ஏன் அழியப் போகுது? அதுக்குப் புற்று நோய்வந்துவிட்டதா? தமிழ்

## பஸ்பிரயாணிகள் சங்கம் பாராட்டும் குறையும்

மானிப்பாய், திங்கள்

உடுவில்-யாழ்ப்பாணம் பஸ் சேவை மிக மோசமான நிலையிலுள்ளதாகவும், முக்கியமாக மாணவர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் சிரமத்துக்குள்ளாகின்றனர் என்றும் உடுவில் பஸ்பிரயாணிகள் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர். சங்கம் தெரிவித்துள்ள புகாரில் மேலும் குறிப்பிடப்பட்டவை வருமாறு.

இப்பாதையில் மூன்று பஸ்கள் மாத்திரமே ஓடுகின்றன. இம்மூன்று பஸ்களும் முறையாக ஓடாது அடிக்கடி பழுதடைவதால் காத்திருக்கும் பிரயாணிகள் காலதாமதத்துக்குள்ளாக வேண்டியேற்படுகின்றது. சில பாதையிலும் திடீர்ப் பரிசோதனைக்குழு பிரயாணிகளின் டிக்கட்டுகளை பரிசோதித்து வருகிறது. இன்னும் சில வாரங்களுள் கூடுதலான பஸ் வண்டிகள் பருத்தித்துறைக்குக் கிடைக்கவிருப்பதாக பஸ் தொழிலாளர்சங்கப் பிரமுகர் ஒருவர் கூறினர்.

— —

## பரதசங்கம் [illegible]தமருக்கு வாழ்த்து

கோட்டை, திங்கள்

"அண்மையில் [illegible] பெற்ற பொது[illegible] தலைமையிலான

## அமைச்சர்களை வடமராட்சி வரவேற்கும்

பருத்தித்துறை, திங்கள்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிப் பழைய மாணவர் சிலர் இக்கல்லூரி முன்னாள் மாணவ அமைச்சர்திரு. கே. பி. இரத்னயக்காவுக்கு மேற்படி கல்லூரி மண்டபத்தில் ஒரு வரவேற்பளிக்கவிருப்பதாகத் தெரிய வருகிறது.

தபால் தொடர்பு அமைச்சர் திரு. எஸ். குமாரசூரியர், வீடமைப்பு அமைச்சர் திரு.பீட்டர்கெனமன், கல்வி உதவியமைச்சர் தி[illegible]பீ.வைதுடாவை நியமன உறுப்பினர் திரு. எம் ஸி. சுப்பிரமணியம் ஆகியோருக்கு உடுப்பிட்டித் தொகுதியில் [illegible]மாத நடுப்பகுதியில் ஒரு பொது [illegible]வேற்பு அளிக்கப்படவிருப்[illegible]கவும்

## ஓய்வுபெறுகிறார்



உரும்பராய், திங்கள்

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையின் அதிபர் திரு. சு. குமாரசேகரம் இம்மாதம் 29-ம் திகதி தமது 60-வது வயது நிறைவுடன் சேவையிலிருந்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரேஸில் வெற்றி

உலக உதைபந்தாட்டப் போட்டியிலே தென்னமெரிக்காவைச் சேர்ந்த பிரேஸில் மூன்ரும் முறையும் வெற்றி ஈட்டி புகழ் பெற்ற கோப்பையை தனதுடமையாக்கிக் கொண்டது பெரிய சாதனையாகும். பிரேஸில் ஒரு வல்லரசல்ல. விஸ்தீரணம் அதிகமென்ருலும், பொருளாதாரத்தில் பலவீனமானதே. அப்படியிருந்தும் பல பெரிய வல்லரசுகளையும் கால்பந்தாட்டத்தில் தோற்கடித்து, பெரும் புகழ் பெற்றுள்ளது. நல்ல பயிற்சியுடன் ஊக்கமும் காட்டியதின் பயனே இப்பெரிய வெற்றி. இது இலங்கை போன்ற நாடுகளுக்கும் நல்ல முன்மாதிரியாகும் நாம் அளவில் சிறிதாக இருக்கலாம். என்ருலும் திறமைமிக்க வாலிபர்களுக்கு இங்கு பஞ்சமில்லை. விளையாட்டு வீரர்களுக்கு அரசாங்கம் நல்ல ஊக்கமளித்து உற்சாகப்படுத்துவதாயின், இலங்கையும் சில விளையாட்டுப் போட்டிகளில் உலக அரங்கிலே வெற்றி பெறுவது அசாத்தியமல்ல. உறுதியும், ஊக்கமும், உழைப்பும் இருப்பின் எதுதான் முடியாது? உலக உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்று தங்கள் நாட்டுக்கு உலகப் புகழ் பெற்றுக் கொடுத்த பிரேஸில் வீரர்களை மனமாரப் பாராட்டுகின்ரேம்.

## டாக்டர் சுகர்ணோ

இந்தோனேஷியாவின் விடுதலை வீரரான டாக்டர் சுகர்ணோவின் மறைவால் உலகம் ஒரு சரித்திர புருஷரை இழந்தது. யுத்தம் முடிந்தபின், இலங்கை, இந்தியா முதலிய நாடுகளுக்கு பிரிட்டன் தானுக சுதந்திரம் வழங்கியதென்ருலும், டச்சு ஏகாதிபத்தியம், இந்தோனேஷிய மக்களுக்கு விடுதலையளிக்க விரும்பவில்லை அச்சமயம் டாக்டர் சுகர்ணோவின் தலைமையில் இந்தோனேஷிய மக்கள் போராடி பல தியாகங்கள் செய்து முடிவில் சுதந்திரம் பெற்றனர். டாக்டர் சுகர்ணோ மட்டும் இல்லாமல் இருந்திருந்தால், அந்நாடு டச்சு ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலை பெற்றிருக்குமா என்பது சந்தேகம். ஆகவே அவரை இந்தோனேஷியா என்றென்றும் மறக்க முடியாது.

நாடு அரசியல் விடுதலை பெற்ருலும், பொருளாதார விடுதலை பெறவில்லை டாக்டர் சுகர்ணோ பல அரசியல் தவறுகளும் செய்திருக்கிருர். நாட்டின் உள்ளே பலாத்கார கலவரங்கள் ஏற்பட்டன. முடிவில் அவர் நாட்டு மக்களின் நம்பிக்கையையும் பின்னர் பதவியையும் இழக்க நேரிட்டது. தனிப்பட்ட வாழ்க்கையிலும் அவர் கட்டுப்பாடு இல்லாதிருந்தது அவர் வீழ்ச்சிக்குப் பெரிதும் காரணமாயிற்று. அவரது வாழ்க்கை, இலங்கை போன்ற புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகளின் தலைவர்களுக்கும் ஓர் எச்சரிக்கையாகும்.

# தென்னிலங்கைச்சிரமதானத் தொண்டர் குழு யாழ். வரும்

மாவிட்டபுரம், திங்கள்

ஐக்கிய முன்னணி அரசு ஏற்பட்டபின் தென்னிலங்கையிலிருந்து முற்போக்கு வாலிபர் இயக்கங்களின் தொண்டர் குழு ஒன்று சிரமதான வேலையில் ஈடுபட யாழ். நகருக்கு இம்மாத இறுதியில் வரவிருக்கிறது.

பின்தங்கிய கிராமங்களில் மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலையிலுள் வீதிகளைச் செப்பனிடுவதே இவர்களின் முதல் வேலையாக அமையுமாம்,

வடபிரதேச கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் தலைமையில் இக்குழு இங்கு இயங்கும்.

தென்னிலங்கை சிரமதானக் குழு முதல் வேலையாக மாவிட்டபுரத்தை யடுத்த கலட்டி என்ற பகுதியில் உள்ள தெல்லிப்பழைகிராமசபைக்கு சொந்தமான வீதியொன்றைச் செப்பனிடும் வேலையிலீடுபவர். இவ்வீதி 'பொன். கந்தையா வீதி' எனப் பெயர் சூட்டப்படுமெனத் தெரிகிறது.

ஐக்கிய முன்னணி அரசு ஏற்பட்டபின் தமிழ் சிங்கள சமுதாயங்களுக்கிடையே நிகழும் முதலாவது பரிவர்த்தனைத்தொடர்பாக இது அமைகிறது எனத்தெரிவிக்கப்பட்டது.

இதற்கான ஏற்பாடுகளை மாவிட்டபுரம்கலட்டி கிராம முன்னேற்றச் சங்கச் செயலாளர் திரு. சிதம்பரம் கதிரவேலன் தலைமையிலான குழு செய்து வருகிறது.

இப்பாதையில் மூன்று பஸ்கள் மாத்திரமே ஓடுகின்றன. இம்மூன்று பஸ்களும் முறையாக ஓடாது அடிக்கடி பழுதடைவதால் காத்திருக்கும் பிரயாணிகள் கால தாமதத்துக்குள்ளாக வேண்டியேற்படுகின்றது. சில வேளை பஸ்ஸை எதிர்பார்த்து ஒன்றரை மணித்தியாலங்களுக்கு மேல் பஸ்தரிப்பிடத்தில் தங்கி நிற்க வேண்டியுள்ளது.

கோண்டாவில் பஸ் டிப்போவில் அமைச்சரால் பஸ் போக்குவரத்துக் கமிட்டி ஒன்று நிறுவப்பட்டிருப்பதைப் பாராட்டும் இச்சங்கத்தினர் இக்கமிட்டியில்பஸ் பிரயாணிகள் சங்கப் பிரதிநிகளுக்கு இடம் வழங்காமைபற்றிக் குறைப்பட்டுக் கொள்கின்றனர்.

## பஸ் சேவை திருப்தி

பருத்தித்துறை, திங்

கடந்த சில நாட்களாகப் பருத்தித்துறை இ. போ. ச. மிகக கிரமத்துடனும் திறமையுடனும் இயங்கிவருவதால் கூடுதலான வருமானம் கிடைத்து வருவதாகத்தெரிகிறது. பருத்தித்துறையிலிருந்து செல்லும் பல் வேறு பாதையிலும் சனக்கூட்டம் அதிகம் காணப்படாமைக்கு காரணம் பஸ் வண்டிகள் கிரமமாக ஒவ்வொருபாதையிலும் ஓடிக் கொண்டிருப்பதேயாகும். ஒவ்வொரு

## இலங்கைக்கு ...

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

கள் முன்வந்ததென்பதை பெட்ரோலியம் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமி இன்று பத்திரிகை நிருபர்கள் கேட்டபோது உறுதிப்படுத்திஞர். இது விஷயத்தில் இறுதி முடிவு எடுக்கப்படவில்லையென்றும் திரு. குமாரசாமி கூறிஞர். தனது அரசாங்கத்திடமிருந்து ஒரு முடிவைப் பெறுவதற்காக ஈராக் தூதுக்குழு நேற்றுத் தனது நாட்டுக்குத் திரும்பிச் சென்றது. ஐக்கிய அரபுக் குடியரசுத் தூதுக்குழு இங்கு தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்திவருகிறது.

வடக்கில் எண்ணைப்படிவங்களிருப்பதாக 1968-ம் ஆண்டில் பிரெஞ்சுக் கம்பனி ஒன்றின் நிபுணர்கள் 250 சதுர மைல் பரப்பில் நடத்திய ஆராய்ச்சியின் முடிவைத் தொடர்ந்து வடக்கில் மன்னர் மற்றும் கரையோரப் பகுதிகளில் எண்ணைக்கிணறுகள் தோண்டுவதற்கு ரஷ்ய, ஐக்கிய அரபுக் குடியரசின் உதவி பெறப்படவிருக்கும் செய்தியையும் திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமி உறுதிப்படுத்திஞர்.

## ...தமருக்கு வாழ்த்து

கோட்டை, திங்கள்

''அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ... தலைமையிலான ... மாக வெற்றியீட்டி தாங்கள் மக்கள் அரசாங்கத்தை அமைத்ததையிட்டு அகில இலங்கை பரதசங்கம் நல்வாழ்த்தைத் தெரிவித்துக்கொள்கிறது''. என்ற தீர்மானம் கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை பரத சங்கச் செயற் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டுப்பிரதமர்சிறிமாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

''பரத குலத்தின் முக்கிய பிரமுகர்களுள் ஒருவராகத் திகழும் திரு. ஜோன் ரொட்ரிகோவை ஆட்சி மன்ற நியமன உறுப்பினராகத் தெரிவு செய்ததையிட்டு எமது சங்கம் தங்களுக்கு விசேஷ நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

''தங்கள் தலைமையில் நாட்டில் சமாதானமும், ஒற்றுமையும், வளமும், மகிழ்ச்சியும்பெருக அகிலஇலங்கை பரதசங்கம் சகலவிதமான ஒத்துழைப்பையும் நல்கச் சித்தமாக இருக்கிறது'' என்றும் இத்தீர்மானம் தெரிவிக்கிறது.

## இ. போ. ச ...

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

டியாக, இடமாற்றம் செய்யவேண்டும் என்றுஇலங்கை போக்குவரத்து சபை தலைவரை கோருவதென தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் மற்றும் தொழிற் சங்கங்கள் பருத்தித்துறையில் கூடி, வேலை நிறுத்தத்தின் போது நிறுவப்பட்ட கூட்டுக் கமிட்டியின் முடிவின்படியே செயலாற்றுவதென தீர்மானித்துள்ளது.

பலவந்தமாக எந்த உத்தியோகத்தரையும், கட்டாயப்படுத்தி வெளியேற்றுவதை எதிர்ப்பதென்றும் மேலிடத்தின் உத்தரவின்படி இடமாற்றம் செய்யப்படுவதை எதிர்ப்பதில்லையென்றும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

பொறியியல் பகுதியில்ஒரு உத்தியோகத்தரை பலவந்தமாக வெளியேற்றிவிட்டு சொந்தக்காரரர் ஒருவரை அப்பதவியில் உத்தியோக பூர்வமற்ற முறையில் அமர்த்த ஒரு இடதுசாரி தொழிற்சங்கவாதி எடுத்த முயற்சி நியாயமற்றதென்றும் இதற்கு இடம்கொடுக்கக்கூடாதென்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது,

கூட்டுக்கமிட்டி விரைவில் கூடி ஆலோசனை செய்யவிருக்கிறது.

உதவியமைச்சர் தி... வைதுடாவை நியமன உறுப்பினர் திரு. எம். ஸி. சுப்பிரமணியம் ஆகியோருக்கு உடுப்பிட்டித் தொகுதியில் அடுத்த மாத நடுப்பகுதியில் ஒரு பொது வரவேற்பு அளிக்கப்படவிருப்பதாகவும் நியமன உறுப்பினர் திரு. எம். ஸி சுப்பிரமணியத்திற்கு கனுவில் சனசமூக நிலையத்திலும் துன்னலை சனசமூக நிலயத்திலும் இம்மாத இறுதியில் ஒருவரவேற்பளிக்கப்படு மென்றும் அறியப்படுகிறது.

## இன்றைய பலன்

**மேஷம்**- வசதிகள் பெருகும். ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த விடயமொன்று உங்களுக்கு சாதகமான பலனைத் தரும்:

**ரிஷபம்**- செய்தொழிலில் சிறப்புக் கிடைக்கும். நீண்டநாள் பிரச்னை இன்று நல்ல முடிவவ வரும். வெளியிடத்திலிருந்து மகிழ்ச்சியைத் தேடித் தரும் செய்தியும் கிடைக்கும்.

**மிதுனம்**-முன்னேற்றத்தை தடுப்பதற்கு விஷமிகள் திட்டம் போடுவார்கள் சிலருக்கு அன்னிய வாசமும் அகாலபோசனமும் உண்டு.

**கடகம்**- கண்ணியம் கடைவிரிக்கும் கடமையும் சிறக்கும்.

**சிம்மம்**- செய்தொழிலில் தளர்ச்சி பிராயணத்தை தவிர்க்கவும். இறைநம்பிக்கை நன்று.

**கன்னி**- கைகொடுத்து உதவுவதற்கு தந்தை முன்வருவார், காரியசித்தியும் கிட்டும். நீண்டநாள் எதிரிகள் இன்று மீண்டும் நண்பர்கள் ஆவார்கள்.

**துலாம்**- தொழில்துறையில் வெற்றி, சுபமான தினம்.

**விருச்சிகம்**- மதிப்பு உயரும். பொதுமக்கள் ஆதரவும் கிடைக்கும். புத்திரரால் புகழும் உண்டு.

**தனுசு**- இன்று எதிலும் நிச்சயமற்ற நிலை தென்படும். மனதில் விரக்தி மனப்பான்மை தலைதூக்கும். மன அடக்கம் நன்று.

**மகரம்**- பக்கத்தில் படுகுழி பார்த்திருப்பர் பகைவர் விழிப்புடன் இருக்க வேண்டும்.

**கும்பம்**- திடீர் திருப்பம் வாழ்க்கையை வளப்படுத்தும்' சிலர் வாழ்க்கை அதிர்ஷ்டகரமாக அமையும்.

**மீனம்**- சுற்றுவட்டாரத்தில் சூழ்ச்சிகள் உருவாகும். சிறு பிணிக்கு இடம் உண்டு. தெய்வநம்பிக்கை நன்மை தரும்.

சோதிடக் கலாநிதி
**திருமலை க. வேலுப்பிள்ளை**

உரும்பராய், திங்கள்

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையின் அதிபர் திரு. சு. குமாரசேகரம் இம்மாதம் 29-ம் திகதி தமது 60-வது வயது நிறைவுடன் சேவையிலிருந்தும் ஓய்வுபெறுகின்ருர்.

1-6-1930ல் காங்கேசன்துறை அமெரிக்க மிஷன் பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கிய திரு. குமாரசேகரம் சுமார் நாற்பது வருடங்கள் ஆசிரியராகச் சிறந்த பணியாற்றிஞர்.

சேர் பொன்னம்பலம் இராமநாதனுல் அமைக்கப்பெற்ற பரமேஸ்வராக்கல்லூரியில் ஆசிரியராகவும் தலைமையாசிரியராகவும் இருபத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து பணிபுரிந்த திரு. குமாரசேகரம் உரும்பராய் பொது மக்களது வேண்டுகோளின்படி உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையின் அதிபர் பதவியை ஏற்ருர். அதிபர் திரு. குமாரசேகரம் தலைமையில் உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை அதிஉன்னதமாக வளர்ச்சியடைந்தது. தொளாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களதும், முப்பதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களதும், பெற்ருர்களதும் தூய்மையான மதிப்புக்கு உரியவராய் விளங்கிய இவர் வித்தியாசாலையில் புதிய கட்டிடங்களை அமைப்பதற்கு அல்லும் பகலும் அயராது உழைத்தார்.

இவரது அளப்பருஞ் சேவையினைப் பாராட்டுமுகமாக இம்மாதம் 28-ம் திகதி பிற்பகல் வித்தியாசாலை ஆசிரியர்களும், 29-ம் திகதி மாலை உரும்பராய் சைவத் தமிழ்வித்தியாசாலை பெற்ருர் ஆசிரியர் சங்கத்தினரும் பாராட்டுவிழாக்களை நடாத்தஒழுங்குசெய்து வருகின்றனர்.

## தீவுப்பகுதி எம். பி. நடவடிக்கை

வேலணை, திங்கள்

நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு தபால் நிலையங்களுக்கு றேடியோ தொலைபேசி வசதி செய்துகொடுக்குமாறு கேட்கப்பட்டதற்கு இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லையென்றும் எப்போது இவ்வசதி கொடுக்கப்படும் என்றும் கோரி தபால்மா அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவுக்குத் தீவுப்பகுதி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம்தந்தி கொடுத்துள்ளார். இதுசம்பந்தமாக உடன் அறிவிக்குமாறு எம். பி. கேட்டுள்ளார்.

ரண்டு ரூபாய் எண்டு காசு எண்ணிக் குடுத்து அரிசி வாங்கின எனக்கெல்லோ அதின்ரை அருமை தெரியும்? அதோடை கொத்தமல்லியும் பருப்பும் கூப்பனில்லாமல் கிடைக்கப் போகுது. மற்றச் சரக்குகளும் குறைந்த விலையில் தாராளமாகத் தரப்போகிருர். குழந்தைகளுக்குப் பால் டின்கள் மலியப்போகுது. அது மட்டுமில்லாமல் மணிமணியளும் விலை குறையப் போகுது. குடும்பம் நடத்துகிற ஒரு வீட்டுக்காரிக்கு இதைவிட வேறையென்ன வேணும்?

4 தாமோதரம் சடாட்சரம் (50) இளைப்பாறிய அரசாங்க உத்தியோகஸ்தர்: சிறிமா அரசாங்கத்தில் தமிழரின் நிலைமை இப்பொழுது இருப்பதை விடக் குறையப் போவதுமில்லை, கூடப் போவதுமில்லை. இங்கிலிஷ் கவண்மேன்டின்கீழ் இலங்கை இருந்ததுபோன்ற ஒரு நிலைமை உருவாகப் போகிறது. வெள்ளைக்காரரர் தமிழருக்கு பெரிய பெரிய பதவிகள் எல்லாத்தையும் குடுத்து சிங்களவரையும் தமிழரையும் பிரித்து வைத்தார்கள். அந்தக்காலத்துத் தமிழர் பதவிக்கும் பணத்துக்கும் ஆசைப்பட்டு தங்கள் மதத்தையும் மொழியையும் அடைவு வைத்தனர். பலர் கிறிஸ்தவர்களாகி ஆங்கிலத்தில் நிபுணராஞர்கள், அதேமாதிரித்தான் இப்பொழுது சிறிமாவும் செய்யப்போகிருர். இங்குள்ள சிறுபான்மைத் தமிழர்களுக்கெல்லாம் நிறைய வசதிகளையும், சலுகைகளையும் கொடுக்கபபோகிருர். நசுக்கப்பட்டிருந்த அவர்கள் இதுதான் தருணமென்று சிங்களத்தை ஆவலோடு படிக்கப்போகிருர்கள். பலர் புத்த சமயத்தை தழுவவும் தயங்கமாட்டார்கள் ஏன், இப்பவே இந்த மாறுதல் தொடங்கிவிட்டதல்லவா? பிரித்தாளும் கொள்கை எந்தநாட்டிலும் எந்த சமயத்திலும் வெற்றிதருமென்பது நிச்சயம், தமிழர் சமூ

இளைப்பாறிய தமிழ்ப்பண்டிதர்: தமிழ்அழியப் போகுது தமிழ் அழியப் போகுது" என்று சிலர் கூக்குரலலிடுகிருர்கள். தமிழ் ஏன் அழியப் போது? அதுக்குப் புற்றுநோய்வந்துவிட்டதா? தமிழ் ஒருபோதும் அழியாது தம்பி, தமிழோடு தோன்றிய லத்தீன், கிரேக்கம், ஹிபுறு எல்லாம் அழிந்துவிட்டன. தமிழ் இன்றும் தழைத்தோங்குகிறது. சர்வதேச மகாநாடு நடத்தும் மொழி தமிழ் ஒன்றுதான். ஆனபடியால் இலங்கையிலை சிறிமா ஆண்டாலென்ன, டட்லி ஆண்டாலென்ன, தமிழ் ஒரு நாளும் அழியாது

7 வீரசிங்கம் ஜெயராஜன்: (22) பஸ்கொண்டக்டர்: அதோ பாரும் பஸ் கண்ணுடியிலை யாருடைய படம் ஒட்டப்பட்டிருக்கிறதென்று. என். எம். கொல்வின், பீட்டர், சுபசிங்கா, இலங்கரத்ன இவர்கள் மந்திரி சபையில் இருககும் வரை தமிழருக்கு ஒரு தீங்கும் வராது இன்னும் நன்மைகள் கூடும் என்றே சொல்லவேண்டும். ஒரு காலத்தில் டாக்டர் என். எம். தமிழுக்கு சம அந்தஸ்து வேண்டுமென்று வாதாடி சிங்களவரிடம் குட்டுப்பட்டவர் என்பதை மறுக்கபபடாது,

— வழிப்போக்கன்

## விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை

மாவிட்டபுரம், திங்கள்

தெல்லிப்பழைப் புகையிரத நிலையம் விஸ்தரிக்கப் படவேண்டியதன் அவசியம் குறித்து காங்கேசன்துறை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. எஸ் ஜே வி. செல்வநாயகம் புகையிரதப்பகுதி பொதுமுகாமையாளருடன் பேச்சுவார்த்தை நடத்தியதன் காரணமாக விரைவில் அப்புகையிரத நிலையம் விஸ்தரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பதாக திரு செல்வநாயகத்திடம் பொது முகாமையாளர் உறுதியளித்துள்ளார்.


## தேவை

புன்னாலைக்கட்டுவன், குப்பிளான், ஏழாலை, குரும்பசிட்டி, வசாவிளான், கட்டுவன் ஆகிய இடங்களுக்கு பத்திரிகை விநியோகம்செய்யப் பிணைப் பணம் கட்டக்கூடிய சொந்தச்சைக்கிள் வைத்திருக்கும் பையன் ஒருவர் உடன் தேவை. நேரில் வரவும்.

நிர்வாகி
ஈழநாடு, யாழ்ப்பாணம்.

2328


இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜூன் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org